Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 10-4-1948 சனிக்கிழமை மலர் 31.

## நாம் என்ன எதிர்பார்க்க முடியும்?

★

தோழர் ரெட்டியார் வெற்றி பெற்று விட்டார். அவர் வெற்றி பெற்றதற்காகத் துக்கப்படுவதா, மகிழ்ச்சியடைவதா என்பதே எனக்குத் தெரியவில்லை. சிறுத்தை வலமாகப் போனால் நல்லதா இடமாகப்போனால் நல்லதா என்று கேட்டால் எப்படிப்போனாலும் போகட்டும். ஆனால் நம் மீது விழுந்து கடிக்காமற் போனாலே போதும் என்று கூறுபவனுடைய நிலைமையில்தான் நான் இருக்கிறேன். நமக்கு யார் வருவதும் ஒன்றுதான் என்ற போதிலும் இந்த தேர்தல் இவ்வளவு பெரிய இனப் போராட்டத்தில் நடக்கக் கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏதோ தமிழர் ஆந்திரர் போராட்டமாகவோ, ஆச்சாரியார் பிரகாசம் போராட்டமாகவோ இருக்கக்கூடும் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் வேறு எங்கும் இதுவரை நடந்திராத அளவுக்கு பார்ப்பனர் பார்ப்பனரல்லாதவர் என்ற இன உணர்ச்சி காங்கரஸ் வட்டாரத்தில் தலைகாட்டியிருக்கிறது. இதுபற்றி வேண்டுமானால் நாம் சொற்ப அளவுக்குச் சந்தோஷம் அடையலாமே தவிர அதாவது வகுப்பு உணர்ச்சி இல்லாத மக்கள் யாராவது உண்டா என்று அறிய ஒரு சந்தர்ப்பமாயிற்று என்பதைத்தவிர மற்றப்படி மகிழ்ச்சி யடைவதற்கான எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. முக்காட்டுக்குள் இருந்தவர்கள் அம்பலத்துக்கு வந்தார்கள். அவ்வளவுதான்.

வெற்றி பெற்ற தோழர் ராமசாமி ரெட்டியார் காந்தி யாரின் முக்கிய சீடர். நானும் அந்த வகையில் அவருக்கு சீனியர் வகுப்பில் இருந்தவன்தான். என்றாலும் அவர் அதோடல்லாமல் ரமண ரிஷியின் பிரதம சீடர். அப்படிப் பட்ட ஒருவரிடமிருந்து நாம் என்ன பிரமாதமான நன்மையை எதிர்பார்க்க முடியும்?

—பெரியார் ஈ. வெ. ரா.

# ஸ்ரீ காந்திஜியே மம; விஷ்ணுஹரே!

"தண்ணமுதம் தாரை"

இடம்:- வைகுண்டம்.

காலம்:- மாலை.

இருப்பவர்:- விஷ்ணு, லக்ஷிமி.

விஷ்ணு:- என்ன லக்ஷிமி! லோக மாதாவாகிய நீ கூடவா கோபித்துக்கொள்வது.

லக்ஷிமி:- ஆமாம்! நீங்கள் செய்கிற காரியத்திற்கு கோபிக்காமல் கொஞ்சத்தான் வேண்டும். ஏன் அப்படித்தானே? என்னை மறந்து எவ்வளவு காலமாயிற்று. நீங்கள் உங்கள் காரியமே பெரிதென்று போய் விட்டீர்களே!

விஷ்ணு:- அடடா! என்ன சொல்மாரி பொழிந்து விட்டாயே! ஆகவே என்னைத் திரும்பித்தான் பாரேன்.

(நாரதர் பாடிக்கொண்டே வருகிறார் சமய சந்தர்ப்பம் தெரியாத மனிதர்)

விஷ்ணு;- வாரும் நாரதரே! ஏது சாவகாசமாக............

நாரதர்:- வெறுமே உங்களைத் தரிசிச்சிட்டுப் போலாம்னு வந்தேன்.

விஷ்ணு:- ஓஹோ! அப்படியா, நாங்கள் தான் இருக்கிறோமே லக்ஷிமி சமேதரா—நன்னா தரிசியுங்கோ.........

நாரதர்:- ஹே! ஆபத் பாந்தவா, அனாதரட்சகா, ராவண சம்காரா, தங்களுடைய கடைசி அவதார, மான மகாத்மா காந்திஜீயின் சொரூபதரிசனம் கொடுங்கள்...... அதற்காகவே தங்களை நாடி வந்தேன்.

லக்ஷிமி:- பிராணேசா! நாரதர் ஏதோ மகாத்மா காந்தி சொரூபம் என்கிறாரே அது என்ன?

விஷ்ணு:- என்ன லக்ஷிமி! உனக்குக்கூட மறதி அதிகம் போலிருக்கே. பூர்வ ஞானம் எல்லாம் போயிட்டாப்பலே இருக்கே......

நாரதர்:- ஹே! ஆர்ய ரக்ஷகா, தேவி, தான் எடுத்த அவதாரங்களை மறந்து விட்டாற்போல இருக்கிறது. தாங்கள் அனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறேன்.........

லக்ஷிமி:- பிராணேசா! அருள் புரியுங்கள்.....இல்லா விட்டால்...

விஷ்ணு:- அடடா......அதற்குள் கோபமா உனக்கு விபரமாகச் சொன்னால் தானே புரியும்.

நாரதரே! ஏன் அப்படி அமருங்களேன். (நாரதர் காந்திஜி,காந்திஜி என்று கூறியவாறு உட்காருகிறார்)

விஷ்ணு:- என்னகாந்திஜீ என்று ஜெபிக்கிறீர். முன்பு என் பெயரை ஜெபிப்பீரே!.........

நாரதர்:- தங்களுடைய கடைசி அவதாரமாயிற்றே அதனால் தான் ..................அப்படி ஜெபித்தேன். மேலும் தங்களுக்கு பூலோகத்திலே கோவில்வேறே கட்ட ஆரம்பிச்சுட்டா பூலோக வாசிகள்.

லக்ஷிமி:- என்ன நீங்கள் உங்கள் திருவிளையாடலைக் கூறாமல் .........காலக்கரணம் செய்கிறீர்களே?

விஷ்ணு சொல்லத் தொடங்கிச் சொன்னார்.

லக்ஷிமி! நாம் கிருஷ்ணாவதாரம் எடுத்து துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்துவிட்டு மீண்டும் வைகுண்டத்தில் வந்து (ரெஸ்ட்) ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தோமே அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? பூலோகத்திலே நம் தேவபாஷையாகிய சமஸ்கிருதம் அழிந்து அரக்கர்கள் என்று நம்மைத் துதிக்கும் திராவிடத் தமிழர்களின்மொழியாகிய தமிழும்,வேறு பல பாஷைகளும் முன்னேற்றமடைந்ததைக் கண்டும் நம்மால் கிருஷ்ணாவதார காலத்தில் பகவத் கீதையில் கூறப்பட்ட வர்ணாச்சிர தர்மம் அழிந்து வருவதால் நம் பிரதிநிதிகளான பூதேவர்கள்மனம் வருந்தி கூக்குரலிட்டார்கள். மிக இரக்க குணம் படைத்த என் மனம் வருத்தப்பட்டது. எனவே நான் பூலோகத்திலே வடஇந்தியாவிலே போர்பந்தர் என்ற கிராமத்திலே பிறந்து கரம்சந்திர காந்தி என்ற பெயரையும் பெற்றேன். பின்னர் மேல்நாட்டுக்குப் போய்ஆங்கில பாஷையையும் கற்றுக்கொண்டேன். அதுசமயம்இந்தியா அடிமை நாடாகவிருக்கிறது; நாம் சுதந்தரமாகவும் வாழவேண்டும் என்ற கிளர்ச்சியைத் தொடங்கிப் பாமர மக்களைத் தூண்டிவிட்டேன். சண்டித்தனத்திற்கு சத்தியாக்ரஹம் என்ற பெயர் கொடுத்து கிளர்ச்சி நடத்தி பல முறை சிறை சென்றேன். லக்ஷிமி, நீயும் கஸ்தூரிபாய் என்ற பெயரோடு பிறந்து எனக்கு பாரியையாக என்னுடனேதான் இருந்தாய். நான் காந்தியாக அவதாரம் எடுக்குமுன்பே உன்னைக் கஸ்தூரியாகவும் நம் ஆதிசேஷனை ராஜாஜியாகவும், நம் சக்கரத்தை ஜவஹர்லாலாகவும், சங்கை சர்தார் பட்டேலாகவும் பிறக்கும்படி அனுக்கிரஹித்து இருந்தோம்! நம் அவதார நோக்கத்தின்யடியே இரகசியமாக நம் பூதேவர்களாகிய பிராமணர்களுக்குப் போதுமான ஆதரவு உண்டாகி அவர்கள் க்ஷேமம் அடையவும், செத்த மொழியென்று உலகத்தவர்கள் கூறும் சமஸ்கிருதத்திற்கு ஹிந்தி என்று பெயர் கொடுத்து புது மெருகு பூசி இந்தியாவில் பரவவும் செய்தேன். ஜாதிபேதம் ஒழிய வேண்டும் என்று மேடை ஏறிக் கூறினேன். ஆனாலும் வர்ணாச்சிரமம் வாழவே ஹரிஜன் என்ற பத்திரிகையும் நடத்தி வந்தேன். பூதேவர்களாகிய நம் பிராமணர்களின் லௌகீகத்துக்கு ஒத்துவராத பண்புள்ள திராவிடர்கள் ஹிந்தியை எதிர்த்தார்கள், தமிழ் வாழ்க என்று.

நம் ஆதிசேஷனான ராஜாஜி பல ஆயிரக்கணக் கானவர்களை சிறையிலும் அடைத்தார். நம் தேவபாஷையாகிய ஹிந்தியை மட்டும் அல்லாமல் நம் பூதேவர்களாகிய பிராமணர்களையும் என்னால் கிருஷ்ணாவதாரத்தில் படைக்கப்பட்டு காந்தி அவதாரத்தில் காப்பாற்றப் பட்டு வந்த வர்ணாஸ்ரம தர்மத்தை வேரோடு அழித்து மண்ணோடு மண்ணாக்க ஒரு இராவணன் போல் பெரியார் ராமசாமி என்பான் தமிழ்நாட்டிலே தோன்றி எனக்கெதிரிடையாக வீரமுழக்கம் செய்தான். ராஜாஜி படுதோல்வியடைந்து ஹிந்திக் கட்டாயத் திட்டத்தை நீக்கினார். அந்தப் பெரியாரை ஒழிக்க வேண்டி நான் இராமாவதாரத்தில் கையாண்ட முறையையே கடைப்பிடித்தேன். இராவணனை ஒழிக்க அவன் தம்பி விபீஷணனை எனக்கு அடிமையாக்கியது போல, பலகாட்டிக் கொடுக்கும் கண்ணிய மிக்க (கய) வர்களை எம்பாதத்தின் கீழ் படிக்கல் ஆக்கினோம்.

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# இந்து மதத்தைப் போல கொடுமையானமதம் உண்டா?

"கைவல்யம்"

★

வாசகர்களே! வாலிபர்களே! முன்னிரண்டு வியாசத்திலும் பள்ளியில் வைக்கும் சமயப் படிப்பைப்பற்றி ஆலோசித்தோம். இந்த வியாசத்திலும் அதையே ஆலோசிப்போம். நான் எழுதுவது கற்பனையல்ல, கதையல்ல முன் இருந்ததும் இப்பொழுதிருப்பதுமான அனுபோகம்.

"இந்து மதத்தைப் போல உயர்ந்த தத்துவத்தைச் சொன்ன மதமும் தாழ்ந்தவர்களைக் கீழே போட்டு மிதித்து வைத்துக் கொடுமைப்படுத்திக் கொன்ற மதமுமில்லை" என்றார் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தர் படிப்பிலும் உண்மையிலும் உயர்ந்த சந்நியாசி. மேனாட்டுப் பாதிரிகள் "நம்முடைய படிப்புகளெல்லாம் விவேகானந்தர் என்கிற இந்து சந்நியாசியின் படிப்பிற்குக் கீழே நிற்கிற"தென்றார்கள். விவேகானந்தர் சென்னையில் பார்ப்பார்களைக் குற்றம் சொன்னார். அவர் சென்னைக்கு வருகையில் காட்டின மரியாதையை அதற்குப்பின் பார்ப்பார்கள் காட்டவில்லை. விவேகானந்தரைப் போற்றவுமில்லை. மேனாட்டாரைக் குற்றம் சொன்னார். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். நமது நாட்டைக் குற்றம் சொன்னார். அதை ஏற்றுக் கொள்ளாமல் அவரைப்பெரியவரென்று அங்கீகரிப்பதே பார்ப்பார்களுக்கு நஷ்டமென்று நினைத்தார்கள். மேனாட்டுக்கும் நமது நாட்டுக்குமுள்ள வித்தியாசம் அதுதான். பெரியோரால் புகழப்படுவதாகிய பெரிய விடுதலை அதாவது மனிதன் தனது இழி குணங்களினின்றும் விடுபடுதல் நமது நாட்டில் யாராலும் மதிக்கப்படவில்லை. அதைப் பார்ப்பார்கள் மதிக்கவொட்டார்கள்.

இந்து மதத்தைப்போலக் கொடுமையும் அக்கிரமமும் உடைய மதமுண்டா? மனிதர்களைத் தண்ணீரும் ஆகாரமுமில்லாமல் கொன்று அழித்த மதமும் அதையே இனியும் செய்யும் மதமுண்டா? இல்லை. அது எப்படி எதனால் என்பதை நான் சொல்லுவதற்குமுன் நீங்கள் ஒன்றும் தீர்மானம் செய்து கொள்ளாமல் நான் சொல்லுவதை ஆலோசித்துப் பாருங்கள்.

இந்து மதம் அனாதிஎன்றும், கடவுளால் சொல்லப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். அதில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நான்கு ஜாதி. இதற்கு வருணாஸ்ரமமென்று பெயர். இதைத் தவிர பஞ்சமர்கள் என்று அய்ந்தாம் வகுப்பொன்று உண்டு. அந்த வகுப்பைச் சண்டாளர்களென்று வேத வைதீகம் சொல்லும். மேற்சொன்ன நாலு வகுப்பிற்கும் தொழில் முறை, வாழ்க்கை, பாத்தியதை விதித்தது போல்வே அய்ந்தாம் சாதியான பஞ்சமர்களுக்குப் பாத்தியதைகள் வகுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஊருக்குள் குடியிருக்கக்கூடாது. ஊருக்கு வெளியேயிருக்க வேண்டும். தண்ணீரும் சோறும் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் பாவம். உயர்ந்த சாதி கெட்டுப் போகும். பார்ப்பார்கள் ஒன்றுமே கொடுக்கமாட்டார்கள். பார்ப்பார்களைப்பார்த்தும், அவர்களால் சொல்லக் கேட்டும் மற்ற சாதி சூத்திரர்களில் பெரும் பணக்காரக் குடும்பங்கள் தங்கள் வீட்டிலிருந்து பஞ்சமர்களுக்குச் சாப்பாடோ தண்ணீரோ கொடுக்க மாட்டார்கள். இது இந்து மதத்தின் முக்கிய அம்சம். "ஒரே தேசத்தில் பிறந்து, அந்த தேசத்திலுண்டான ஒரு மதத்திலே வளர்ந்து வந்த அந்த சனசமூகத்தின் ஒரு பகுதியைத் தண்ணீரும், ஆகாரமும் கொடுக்காமல் அது கிடைக்கும் மார்க்கங்களை அடைத்து அவர்களைச் சாகடித்து வந்த இந்து மதத்தை என்னென்று சொல்லுவது? இந்தக் கொடுமைகள் நம்முடைய இந்து மதத்திலிருந்து போகாவிட்டால் நம் இந்து மதமும் நாமும் அழிந்து போவோம்" என்று சொன்ன மகாத்மாவைச் சுட்டுக் கொன்றவனுக்கு தீண்டாமையும் சாதிப்பிரிவுகளுமிருக்கவேண்டுமென்பது தானே எண்ணம். இது நமது கண்ணுக்கு முன்னால் நடந்த விஷயம். இதைச் சொன்னால் வகுப்புத்துவேஷமாம்.

இந்த நூற்றாண்டில் டவுனைப் பார்த்து தேசியப் பத்திரிகை படிக்கும் உங்களுக்குப் பஞ்சமர்களின் கஷ்டம் தெரியாது. எந்தப் பார்ப்பார்களுக்கும் தண்ணிகூடக் கொடுக்கமாட்டார்கள். சூத்திரனுக்கே தண்ணி கொடுக்காதவர்கள் பஞ்சமனுக்கு எப்படிக்கொடுப்பார்கள்? அது இந்துமத நிபந்தனை. பல பணக்காரர்களே பார்ப்பான் சட்டப் பிரகாரம் நடக்கிறவர்கள் ஒன்றும் கொடுக்கக் கூடாது. பக்கத்தில் ஆறு இருந்தால் அதில் தண்ணி குடிக்கலாம். அநேகமாக ஊர்களும் ஆற்றோரம்தானிருக்கும், ஊருக்குப் பக்கமான கரையெல்லாம், அந்த அந்த ஊருக்குச் சொந்தம் ஆளில்லாத சமயம் பார்த்துத் தண்ணி குடிக்க வேண்டும். அதையும் சிலர் பார்த்தால் பறையருக்கு இங்கே தான் தண்ணி குடிக்கிற இடமோ என்று கேட்பான். கிறிஸ்துவப்பறையராக விருந்தால் சிறிது சௌகரியமுண்டு. கேட்கவோ தைரியமுண்டு. நமது பஞ்சமர்களுக்கு நாதியில்லை. எதிர்த்துப் பதில் சொன்னால் அடி. வந்தவனெல்லாம் பறையன் எதிர்த்துப் பேசலாமாவென்று தான் கேட்பான். இப்படி அடிக்கலாமாவென்று கேட்டார்கள். போலீசும் அப்படியே இத்தனைக்கும் இந்து மதம் தான் காரணம்.

ஒரே தேசத்தில் பிறந்து வளர்ந்த ஒரு பெரும் சமூகத்தைத் தீண்டாதவாகளென்றது இந்து மதம். அதோடு விட்டு விட்டதா? இல்லை. ஊருக்கு வெளியே தள்ளிற்று, அதோடு விட்டதா? இல்லை? குளம், குட்டை, கிணர் ஆற்றின் படித்துறை எதிலும் தண்ணி எடுக்கக் கூடாதென்று தடுத்தது. அதோடு விட்டதா? இல்லை. சோறு தண்ணி வீட்டிலிருந்தும் கொடுக்கக்கூடாதென்றும் கொடுத்தால் பாவம் நரகம் வந்து விடுமென்று சொல்லி ஜனங்களைப்பயப்படுத்திற்று. அதோடுவிட்டதா? இல்லை. கடை வீதி, வீடு, தோட்டம் முதலிய இடங்களில் சாதாரண கூலிகளைப்போல வேலை கொடுப்பதுண்டா? இல்லை. மலைக்கோ, காட்டுக்கோ போய், புல்லோ, விறகோ கொண்டு வந்து ஊருக்குள் தாராளமாக விற்கலாமா? அதிலும் இம்சை. உலகத்தில் எந்த மதத்திலும் இல்லாத—காணக் கேட்க முடியாத கொடுமைகளை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தைக் கொன்று அழிக்கும் எந்த மதமாவதுண்டா? இது தான் அனாதி, க்டவுள் வாக்கா? அந்தக் கடவுளின் குணமும் தன்மையும் எத்தன்மையானது என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இந்து மதம் உயர்ந்த நீதிகளைப் போதிக்கிறது. அந்த நீதி எல்லா நாட்டுக்கும் வேண்டியிருக்கிறது. அதனால் அந்த நீதிகளை எல்லா நாட்டுக்கும் உபதேசித்து எல்லா நாட்டையம் க்ஷேமப்படுத்த வேண்டுமென்று களவாணிப் பேச்சுப் பேசுகிறார்கள். இந்து மதத்திலுள்ள தத்துவங்கள் எல்லா மதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலேபிறந்து, நம்நாட்டிலே வளர்ந்து, நமக்கே ஊழியம் செய்யும் நம்மவரை நாமே இகழ்ந்து தள்ளி அவர்களிடம் நம்மைப்'பிறப்பதை நாம் தடுத்துஅவர்களை வாட்டி வதைத்துக் கொன்று அழிப்பது எந்த மதத்திலாவதுண்டா? இந்து மதம் பெரிய தத்துவம் தெரிந்த மேதாவிகள் மற்ற நாட்டில் இந்து மதத் தத்துவம் உபதேசிக்கையில் இந்து மதத்திலுள்ள கேடுகெட்ட கீழான கொடுமை இந்து மதத்தை

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# திராவிடனே உன்னைத்தான்!

"த. ஜான்சன்"

★

உணர்ச்சியின் உருவாய் விளங்கும் இளந் திராவிட வீரர்களே! திராவிடநாடு தனியாட்சி பெறச் செயலாற்ற வாரீர் என அழைக்கின்றேன். உரிமைப் போரில் பங்கு கொள்ள விரைவில் வாரீர் என அன்புடன் அழைப்போலை விடுக்கின்றேன். இன்புற்று வாழ்ந்திருந்த இணையற்ற திராவிடம் இன்று ஆடுமாடு மேய்க்கவந்த அந்த நாடோடிக் கூட்டத்தின் சூழ்ச்சியில் சிக்குண்டு மதச் சுழலில் உழன்று இடரிலே சிக்கி இன்னலுறும் இழி நிலையை அறவே ஒழிக்க, அக்குள்ளநரிக் கூட்டத்தின் குண மறுக்க இளம்மாணவர்களை அழைக்கிறேன், வந்து சேர்ந்து இம்முயற்சியில் ஈடுபடுங்களென்று.

இமய முதல் குமரிவரை மாண்பு சிறக்க ஆட்சி செய்து அரும் புகழும், பெருமதிப்பும் பெற்ற நம் இனம், திராவிட இனம், இன்று ஆரியத்தின் அடிவருடியாய், இருகொடியேந்தியாய் வாழ்கின்றது. இந்நிலை போக்கித் தூய்மையுடன் இவ்வுலகில் தலை நிமிர்ந்திடச் செய்ய தாழ்மையுடன் அழைக்கிறேன். வாருங்கள்! உங்களை ஈன்றெடுத்த இனத்தை, கடல் கடந்து வாணிபம் செய்து பெருமைபெற்ற இனத்தை, கண்ணகிக்குச் சிலை யெடுக்க ஆரிய அரசர்களான கனகவிசயரைக் கல் சுமக்க வைத்த இனத்தை உங்கள் முன்னே உருவகப்படுத்தி நிறுத்தியிருக்கிறேன்.

வீழ்ச்சியுற்ற இனம் தாழ்ந்த தொனியிலே கூறுவது அதோ கேட்கிறது. வளமுடன் வாழ்ந்த இனம் இன்று தாழ்ந்த இனமாய், இல்லை. தாழ்ச்சியுற்ற தாழ்த்தப்பட்ட இனமாய் வகைகெட்டு, வன்மையிழந்து, வலிமை குன்றி வறுமைக்குழியில் வீழ்ந்து உளங்குழையும் காட்சியைக் கண்டு கண்ணீர் வடித்த வண்ணம் கூறுவது அதோ கேட்கிறது. பதறாமல் பதில் கூறுங்கள்,

எண்ண அலைகளைப் ரட்சிக் கருத்துக்கள் ததும்பும் கவிதையாக அமைத்து உரைக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் புத்துணர்ச்சிக் கவிதைகளைப் படித்தநீ, திராவிடத்தந்தை பெரியாரின் வீரம் செறிந்த சொற் பொழிவுகளைக் கேட்டநீ, அண்ணாவின் அடுக்குச்சொல் நிறைந்த உணர்ச்சி ஊட்டத்தக்க எழுத் தோவியங்களைப் படித்தநீ, புழுதியிலே புரண்டு, வாழ்விலே வறட்சிகண்டு, உன் உரிமையை மறந்து கதியற்று கிடக்கின்றாயே தோழனே! ஏன் இந்த இழிநிலை? ஆடுவோமே பள்ளுபாடுவோமே ஆனந்தச் சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே! என்று அன்று தொண்டை கிழியக்கத்திய அந்த வாய்ச்சவடால் வீரர்களைக் கேட்கிறேன், எது சுதந்திரம், யாருக்கு சுதந்திரம் என்று. தாழ்ச்சியுற்ற இனம் நல்வாழ்வு பெற புதுவாழ்வை யெய்த சுதந்திரம் உண்டா? உங்கள் வீரத்தை, உங்கள் உரிமையை, உரிமையின் பேறால் உந்தப்பட்ட உணர்ச்சி வேகத்தை செயல் முறையிலே பணியாற்ற முன் வராமல் மூலையிலே முடங்கிக் கிடப்பதோடு மட்டுமல்ல உங்கள் பெண்களின் சுதந்திரத்தையும் பிடுங்கி வாயில்லாப் பூச்சிகளாக அடங்கியொடுக்கி அழுத்தி அடுப்பூதிகளாக வைத்திருக்கிறீர்களே! ஏன்? "என்னருமைத் திராவிட இனமே! அறுதியிட்டு உறுதியுடன் கூறிவிடுகிறேன் கேள்! உன் இழிநிலை போக்கி, பண்டையப் புகழை நாட்டிலே நிலை நாட்டுவோம். அதற்கான தியாகமனைத்தையும் தயங்காது புரிவோம். மாசு துடைப்போம். உரிமைப்பண் இசைப்போம். திராவிட நாட்டை உருவாக்க அல்லல்கள் பலவரின் ஆண்மையுடன் அவற்றை ஏற்போம். தொல்லையும், துயறும், அடக்கு முறையும் துச்சமெனக் கொண்டு இன்பத் திராவிடம் அமைப்போம். பெற்றால் வாகை மாலை—இன்றேல் சாவுஓலை. வாளின் நிழலடியில் பிறந்த வீராதி வீரர்கள் நாம். வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித்தோள். மடமை மாய, மமதைமாழ, அக்கிரமம் அழிய, அவலநிலை அகல, தன்னாட்சி நிறுவ, இரத்தம்சிந்தத்சித்தம்! இன்றே தயார்!! இதோ தயார்!! என்று அன்று மார்தட்டிப் பேசிய மேடைப் பிரசங்கிகள் கைகொட்டி ஆரவாரம் செய்த பொதுமக்கள், புரட்சிப் பொறி பறக்கத் தீட்டிய பத்திரிகாசிரியர்கள், ஏன் படிக்கும் வாசகர்கள் இவர்கள் யாவரையும் நோக்கிக் கேட்கிறேன்! நீங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங் காலம் நெருங்குகிறது. காலம் கடுகி அழைக்கிறது. வாருங்கள்! விரைந்தோடி வாருங்கள்! அவரவர் பணியை உவந்து செய்ய உடனடியாக வாருங்கள்! என்று. இன்றுள்ள நிலைமையை படம் பிடித்துக் காட்டி, பிற சமுதாயங்கள் எந்தெந்த முறையில் முன்னேறுகின்றன, முன்னேற்றமடைந்து எச்சரிக்கையுடனிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி வாவென்று அழைக்கிறேன் தோழா! வருவாயா?

வேண்டுகையோடு விடைபெற விரும்பவில்லை நான். இன்னமுமுண்டு, ஊன்றிக்கேள்! மாய்கையிலே உழலும் மானிடப் பதரே! உரத்தக் குரலில் உரைக்கின்றேன் கூர்ந்து கேள்! திராவிட நாட்டிலே பிறந்த நீ இமய முதல் குமரி வரை இதமுடன் ஆண்ட நீ திராவிடத்தின் நாகரீகத்தை உலகுக்கு உணர்த்திய நீ உன் வாழ்வையும் வளமாக்கி ஆடுமாடு மேய்க்க வந்த அந்த நாடோடிக் கூட்டத்தை வாழ வகை செய்த நீ, கப்பலோட்டிக் கடல் கடந்து வாணிபம் செய்த நீ, நாகரீகத்தை, நல்லுடையை, ஆட்சி முறையை, சமுதாயத் திட்டத்தை உலகுக்கு அள்ளித் தந்த நீ, கிரேக்க ரோமானிய நாட்டிற்கு அகிலும் சந்தனக்கட்டையும் வாசனைப் பொருள்களையும் அள்ளித் தந்த நீ இன்று ஒடுங்கிய நிலையெய்தி ஒருபிடி அன்னத்திற்கும், ஒரு முழத்துண்டுக்கும் ஏங்கிக் கொண்டு உன் வறண்ட வாழ்வை நடத்துகின்றாய்! ஏன் இந்த இழிநிலை என என்றாவது நீ எண்ணிப் பார்த்ததுண்டா? பன்னீரில் பல் துலக்கிப் பாலும் பழமும் உணவாகக் கொண்டு ஒரு

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

ரோஜா முத்தையா



# சிந்தியுங்கள் ! தோழர்களே ??

நாம் சந்தேகிக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்குத் தெளிவாக பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் உணர்ச்சி காங்கரஸ் தியாகிகளுக்குள்ளாகவே தேர்தலில் தலைகாட்டியது என்றாலும், முக்கிய பலன் ஒன்றும் நாம் அடைந்துவிடப் போவதில்லை. இந்த ஆட்கள் நாளைக்குச் சுலபமாக மாறி மறுபடியும் பார்ப்பனர்கள் காலில் விழமாட்டார்கள் என்றும் நம்மால் கருதமுடியாது. நாளை விடியற்காலையிலேகூட இவர்கள் பார்ப்பான் காலில் நுழைந்து வெளிவருவார்கள். ராஜகோபாலாச்சாரியை விரட்டிய சிப்பாய்கள் தானே இவர்கள்! பிறகு இவர்கள் தலைவரே இங்கு வந்தால் வெட்கக்கேடு என்று வடநாடு சென்று ராஜகோபாலாச்சாரியார் காலில் விழவில்லையா?

* *

நாம் 100 க்கு 95 பேர்கள், 100 க்கு 3 பேர் இடம் அல்லல் படுகிறோம். நம் மானத்தை வீரத்தை காணிக்கையாக வைத்து உயிர் வாழ்கிறோம்.

* *

அரசியலில் புகுந்தாலே எவனுடைய யோக்கியதையும் கெட்டுப் போகுமே. கெட்டுப் போய்த்தானே இருக்கிறது? அரசியல் என்பது வடிகட்டின அயோக்கியத்தனம் என்று ஒரு மேல்நாட்டு அறிஞர் கூறியிருக்கிறார் என்று நான் அடிக்கடி கூறிவந்திருக்கிறேன்.

* *

காந்தியார் உயிரோடு இருந்திருப்பாரானாலும் இந்த 7, 8 மாத அனுபவத்தைக் கொண்டு ஏதாவது அவர் செய்யக் கூடும். அமைப்பை மாற்றி யமைக்கக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அவரும் கொல்லப்பட்டுவிட்டார்.

* *

நேருவேபொது உடைமை தத்துவத்தை நசுக்கத் துணிந்துவிட்டதாகக் கூறி "பொது உடைமை வாதிகளே ஓடிப்போங்கள்" என்று கூறிவிட்டார். படேலோ, "சமதர்மவாதிகளே வெளியேறுங்கள்" என்று கூறிவிட்டார். சண்முகமோ முதலாளிகளைக் காப்பாற்றுவதுதான் ஏழைகளைக் காப்பாற்றுவதாகும்" என்று சொல்லிவிட்டார். வைத்தியநாதய்யரோ "வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரும் வகுப்புவாதிகளே வெளியேறுங்கள் என்று கூறிவிட்டார். பொது உடைமை கூடாது என்றால், சமதர்மம் கூடாது என்றால், முதலாளிகள் கொள்கை வாழவேண்டுமென்றால், வகுப்பு நீதி கூடாது என்றால் பின் எதற்காக ஒரு ஆட்சி இருக்க வேண்டும்.

* *

பார்ப்பனர்களை ஆதரிக்க, அவர்கள் மதத்தைக் காப்பாற்றிக் கொடுக்க அவர்களின் கையாட்களான பணக்கார மிராசுதாரர்களைக் காப்பாற்ற மற்றும் பார்ப்பன அடிமைகளான முதலாளிகளை அவர் இஷ்டப்படி வேண்டுமளவும் சுரண்டுதல் செய்ய அநுமதிகள், மற்றும் காலிகளுக்கும் கொலைகாரக் கொடுங்கோலர்களுக்கும் ஏதேனும் வசதிசெய்து கொடுக்க இன்றுள்ள உயர்வு தாழ்வுகளை அப்படியே நிலைக்கச் செய்ய, இதற்காகவா ஒரு ஆட்சி இருக்க வேண்டும்?

* *

தற்போது ஏதாவது நல்ல காரியம் நடக்கிறதென்றால் அதெல்லாம் நாம் அந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்காமல் இருப்பதால்தான் என்பதை நீங்கள் உணர வேண்டும். அந்தப் பக்கம் தலைவைத்து விட்டோமோ அவ்வளவுதான் தாமதம். அப்புறம் நேற்றுச் சண்டையிட்டுக் கொண்ட இரண்டு பேருமே ஒன்று சேர்ந்து கொண்டு நம்மை ஒழிக்கப்பார்ப்பார்கள். ஆகவே ஒதுங்கி யிருப்பதுதான் மிக நல்ல காரியம். ஒதுங்கியிருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. ஒதுங்கியிருந்தாலொழியத் திராவிடர் கழகத்தின் சமுதாயச் சீர்திருத்தத் திட்டம் சீக்கிரம் நிறைவேறாது என்பதற்காகத்தான்.

* *

வெளியிலிருந்து மக்களுடைய உணர்ச்சியைக் கிண்டிவிட்டு அவ்வுணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு ஆட்சியாளர்களைச் சட்டமியற்றும்படி வற்புறுத்தி வருவதுதான் நமது திட்டம். அப்படிப்பட்ட திட்டத்தின் மூலம்தான் நமது லக்ஷியமும் விரைவில் கைகூடும். சமுதாய இழிவு நீக்கப் பிரசாரம்தான் நமது திராவிடர் கழகத்தின் முக்கிய மான வேலை.

* *

இனி ஹிந்துவாகஇருக்கமாட்டேன். நான் இனி சூத்திரனாக இருக்க மாட்டேன். இந்துமத அடையாளம் அணிய மாட்டேன்' என்று முழக்கம் செய்தல் வேண்டும். இப்படி ஒவ்வொருவரும் கூறுவார்களானால் பார்ப்பனர்களே முன்வந்து 'மனுதர்மமே' மக்களுக்கு எழுதப்பட்டதல்ல. அது தேவாளுக்கு எழுதப்பட்டதாக்கும்," என்றுகூறி தம்மையே மாற்றிக் கொண்டு விடுவார்கள்.

* *

<u>சிறு கதை.</u>

## ஒரு மணி !

"ஐயா"

நீல வானில் பூர்ணச்சந்திரன் புன்னகை புரிந்தான். உச்சிவானிலே உல்லாசமாகத் திரிந்தான் அவன். ஊர் உறங்கிற்று! எங்கும் நிசப்தம்! பாட்டாளி உலகம் உழைத்த அலுப்பால் உறங்கிற்று.

தெருக்கோடியில் இருந்த அந்த வீட்டில் ஒரு சிறு விளக்கு எரிந்து கொண்டிருந்தது! வீட்டின் திண்ணையிலே ஒரு வாலிபன். யார் உறங்கினாலும் அவனுக்கு உறக்கமில்லை. வானில் தெரிந்த அந்த வட்ட நிலாவை உற்று நோக்கினான் வாலிபன். ஒரு பெருமூச்சு வெளிவந்தது! அதில்தான் எவ்வளவு அர்த்தம்! பக்கத்து வீட்டில் மல்லிகைச் செடி பூத்துக் குலுங்கிற்று! அதைப் பறிப்பாறற்று, தன் ஆட்சியைச் செலுத்திற்று! அப்போது தான் மல்லிகையின் மணத்தை உணர்ந்தான். மல்லிகை! அதன் மணம்! அவன் மனம் பின்னோக்கிச் சென்றது.

"இந்த மல்லிகையின் மணம், என்

---

கருஞ்சட்டை போட்டுக் கொள்ளக் கூடாது என்று யார் கூறினாலும், பூணூல் அணிந்த கூட்டம் நாட்டில் இருக்கும்வரை கருஞ்சட்டை அணிந்த கூட்டமும் இருந்தே தீரும். உச்சிக் குடுமி உள்ளவரை கருப்புக் கொடியும் பறந்து தீரும் என்று சொல்லிவிடுங்கள்.

* *

உங்களை எந்தப் பார்ப்பனன் இது ஏன் என்று கேட்டாலும் "நீஉயர்ஜாதி என்று காட்டிக் கொள்ள நீபூணூல் அணிந்து கொள்ளும்போது" "நான் சூத்திரனல்ல. ஹிந்துவல்ல" என்று காட்டிக் கொள்ள நான் ஏன் கருஞ்சட்டை அணிந்து கொள்ளக் கூடாது" என்று ஒவ்வொருவரும் கேட்க வேண்டும்.

* *

சட்டசபையைப் பற்றிக் கவலை வேண்டாம். மந்திரி பதவிக் கவலை வேண்டாம். அதைப் பார்ப்பனருக்கும் அவர்கள் அடிமைக்கும் விட்டு விடுங்கள். நாம் கட்டுப்பாடான பிரசாரம் செய்து மக்களை மானமுள்ளவர்களாக ஆக்கினால் எந்தக் காரியமும் கைகூடும். மந்திரிகள் நமக்குச் சலாம் போடுவார்கள்.

* *

பார்ப்பானைத் தவிர்த்து வேறு எந்த சாதியாவது காந்தியாரைச் சுட்டிருந்தால் அந்த சாதி மனிதன் ஒருவனையாவது கண்காட்சிக்காவது காண முடியுமா?

மனத்தை எவ்வளவு இன்ப மூட்டியுள்ளது! அது ஒரு காலம்! இதே மல்லிகையின் மணம் இன்று ஏன் எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. என்ன உலகம் இது! என் வாழ்வு வறண்டது இந்த மல்லிகையின் மணத்தால்தானே! மல்லிகையின் மணமா? அல்ல, அல்ல அர்த்தமற்ற சமுதாய அமைப்பால்! காட்டுமிராண்டிக் காலக் கொள்கையால்! 'காதல்' என்பதை ஏட்டிலே படித்து இன்பம் அனுபவிக்கும் சமுதாயத்தால்! என்ன சமுதாயம்'' என்று எண்ணினான் பாண்டியன்.

பாண்டியன் உரமுள்ள நெஞ்சினன். அவனே சமுதாயத்தை வெறுக்கின்றான். அவன் வாழ்வு கசந்து விட்டது! ஏன் என்று கேட்டால், 'அர்த்தமற்ற சமுதாயம்' அதனால் தான் என்று சொல்லுகின்றான்.

எப்போதும் போல்தான் அன்றும் பள்ளிக்குச் சென்றான்! பாண்டியன் இளங்காளை! அவன் கண்டான் ஒரு கன்னியை! அவளும் பள்ளிக்குத்தான் சென்றாள்! எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கின்றான் பாண்டியன். ஆனால் அந்த மயிலின் மந்தகாசம் அவன்மனதில் நின்று விட்டது. அந்தப்பாவையின் சிரித்த இன்முகம் அவன் உள்ளத்திலே எழுதா ஓவியம்! அவளும் பெண்தானே! பாண்டியன் உருவம் பாவையின் உள்ளத்திலே!

அவளைப் பார்க்காமல் பள்ளிக்குச் செல்வதில்லை பாண்டியன்! பாவையைப் பார்த்தால்தான் படிப்பு ஏறும் என்ற நிலையை அடைந்தான். அவளைப் பார்க்காவிட்டால், அவனுக்கு இந்த உலகமே இருண்டது போலத்தான்! அவன் அப்படித்தான் நினைத்தான்! அவளுக்கு எப்படியோ?

ஒரு நாள் பாண்டியனைக் காணவில்லை என்றால், மறுநாள் பல முறை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே பள்ளிக்குச் செல்வாள் செல்வி! ஆம்! செல்விதான் அவள் பெயர்.

அம்பிகாபதி அரசன் மாளிகையிலே விருந்துண்டான்! அமராவதியைக் குறித்துக் காதல் மிகுதியால் பாடிவிட்டான். சோழன் மனம் சோதனையில் இறங்கிற்று! கலைவாணி காத்தாள், கம்பனுக்காக அம்பிகாபதியை. ஆனால் பாண்டியனுக்கு கலைவாணி அருள் இல்லை. கலைவாணி மீதே அவனுக்கு நம்பிக்கை இல்லாதபோது............!

ஒருநாள் பாண்டியன் தன்கடையில் அமர்ந்திருந்தான். செல்விக்காகத்தான். அவள் அந்தப் பக்கமாகத்தானே பள்ளிக்குச் செல்ல வேண்டும். அவள் வந்தாள்! வழக்கத்திற்கு மாறாக மருள,மருள விழித்தாள். அவன் அவளைப் பார்த்தான்! அவளும் அப்படியே! கண்கள் நான்கும் அப்படியே ஒன்றையொன்று விழுங்கிவிடுவதைப்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

# ஏது நிஜமோ?
# நாமறியோம் பராபரமே!

★

## "என் இலாக்காக்களில் அவர் தலையிட்டார்"

சென்னை, ஏப். 4—

சென்னை மாகில முன்னாள் உள்நாட்டு மந்திரியான டாக்டர் சுப்பராயன் "நிர்வாகப் பொறுப்பில் பிரதமர் தலையிட்டதேதனது விலகுதலுக்குக் காரணம்" என்று வெளியிட்டுள்ளார். அ. பி. நிருபருக்கு அளித்த பேட்டியின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டடாக்டர் சுப்பராயன் "மந்திரிகள் வசம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளில் தலையிடப்படாமலிருந்தால் தான் ஒரு மந்திரி சபையிலுள்ள கூட்டுப் பொறுப்பு உண்மையானதாக இருக்கு மென்பது எனது வலிவுள்ள கருத்தாகும். இந்தக் கருத்தில் சரியான நடைமுறைதான் ஒரு நல்ல அரசாங்கத்துக்கு இன்றியமையாதது: அப்படியிருந்தால்தான் மந்திரிசபையின் ஜனநாயகப் போக்கு ஒழுங்காக இயங்கும். பிரதமர் எனது விவகாரங்களில் தலையிட்ட பொழுதெல்லாம் நான் இதை எதிர்த்தே வந்துள்ளேன். குறிப்பாக எனது இலாகா அதிகாரிகளை அழைத்து விவாதித்த பொழுதும் எனக்குத் தெரியாமலே உத்தரவுகள் இட்ட பொழுதும், அவர்களுக்குள் நடந்தது என்ன என்பது பற்றி எனக்குத் தெரியாமல் இருந்த பொழுதும், நான் எதிர்த்தே வந்துள்ளேன். இந்தப் போக்கு பிரதமருக்கு என் மீது நம்பிக்கை யில்லை யென்பதையே குறிக்கு மென்றும் இதனால் இலாகா சிப்பந்திகள் ஒழுங்கு முறையில் சீர் கேடு உண்டாகுமென்றும் நான் தெளிவு படுத்தி வந்திருக்கிறேன். எனது இலாகாவில் முன்பு போலதலையிடக்கூடாது என்று கூறப்பட்டதன் பேரிலேயே நான் போலீஸ் இலாகாவை ஏற்றுக்கொள்ள மீண்டும் மனமொப்பினேன். ஆனால் நிலைமையில் எந்த விதமான அபிவிருத்தியும் ஏற்படாததால் எனது நிலை தவிர்க்கக் கூடாததாக ஆய்விட்டது. ஆகவே நான் விலக வேண்டுவதென்கிற முடிவைச் செய்ய நேர்ந்தது.''

## எந்த மந்திரிகளின் இலாக்காக்களிலும் நான் தலையிடவே இல்லை.

சென்னை மார்ச், 5—

சென்னை முன்னாள் உள்நாட்டிலாக்கா மந்திரி டாக்டர் சுப்பராயன் நேற்று விடுத்த அறிக்கைக்குப் பதில் கூறுமுகத்தான் பிரதமர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அடியிற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

"டாக்டர் சுப்பராயன் விடுத்துள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மந்திரிகளுக்குப் பிரித்து வழங்கப் பெற்றிருக்கும் இலாக்காக்களின் நிர்வாகத்தில் நான் தலையிட்டதே கிடையாது. நல்லாட்சி அவசியங் கருதியும், மாகாண நிர்வாகத்தின் தலைவனென்ற முறையிலும், நான் சிற்சில சமயங்களில் பற்பல இலாக்காக்களினுடையவும் தலைவர்களையும் இன்னும் மற்ற மற்ற அதிகாரிகளையும் வரவழைத்துக் கலந்து பேசுவதுண்டு. இதுவும் எதற்காக என்றால், நாட்டு நடப்பை அவ்வப்போதைக்குஅறிந்துகொள்ளவும், காரியங்களைச் செய்து முடிப்பதில் துரிதப்படுத்தவுமேயாகும்.

"எனது சக மந்திரிகளுக்கு அறிவித்த பின்னரே தான், அவர்கள் மனமிசைந்த பின்னரே தான், நான் அதிகாரிகளெவருக்கும் கட்டளை யெதுவும் பிறப்பித்து வந்திருக்கிறேன்.''

"ஏதோ நிபந்தனையின் பேரில் தான் டாக்டர் சுப்பராயன் போலீஸ் இலாகாவை திரும்பவும் ஏற்க சம்மதித்தாரென்று கூறுவது சரியாகாது. இலாக்காக்களைப் பிரித்துவழங்கும் பொறுப்பு பிரதமரைச் சார்ந்ததேயாகும். எனவே, அது சம்பந்தமாக நிபந்தனைகளை யேற்பதென்பதும், தருவதென்பதும் அர்த்தமற்றவையாகும்.''

"நம் மாகாணத்தின் நலமே எனது நிர்வாகத்தின் குறிக்கோளாகுமென்பதை மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.''

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மூட நம்பிக்கை.

—: இங்கர்சால்: —

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

இந்தக் கெட்ட ஆவிகளையெல்லாம் ஆட்டிப் படைப்பது, அவர்களுக்குத் தலைமையாக இருந்து நடத்துவது பேய் என்றும், நல்லாவிகளுக்கெல்லாம் தலைமை வகித்து நடத்துவது கடவுள் என்றும் கருதப்பட்டது! அதே வேளையில், உண்மையாகவே கடவுள் தான் யாவற்றிற்கும் தலைவர், அவரின் குழந்தைகளில் ஒன்றே பேய் என்றும் எண்ணப்பட்டது!

மனிதனின் ஆத்மாவைத்தங்கள் வசப்படுத்த இந்தக் கடவுளும் அந்தப் பேயும் போரிட்டுக் கொள்வதாகவும், கடவுள் "மோட்ச சாம்ராஜ்ய" வாழ்வைக் கொடுத்து 'மாயா உலக பந்தங்களிலிருந்து' விடுவிப்பதாகவும், பேய் இப்பிரபஞ்ச ஆசைகளால் மனிதனை வசப்படுத்தி, அவன் ஆசைகளுக்குத் திருப்தியளித்துக் காதல் போன்ற இன்பங்களால் மனிதனை மயக்கியதாகவும், மோட்ச இன்பங்களையும் நரக வாதனைகளையும் கண்டு சிரித்ததாகவும் நம்பப்பட்டது!

பொறாமைக் கையால் சந்தேக வித்துக்களை ஊன்றி—அதைஆராயுமாறும், காரணங்கண்டு பிடிக்குமாறும் செய்தன வென்றும்; மக்கள் இதயங்களில் 'தான்' என்ற சுயேச்சை ஆசையைக் கிளப்பி, கட்டுப்பாடுகளை உதறி எறிய உதவி மனிதர்களின் மைந்தர்களைத் தவறிய வழியில் செலுத்தியதாகவும் நம்பினர்!

பிரார்த்தனை, நோன்பு, பட்டினியிருப்பது, தியாகம் இன்னபிறசெயல்களைச் செய்து கடவுளின் அருளையும், நல்லாவிகளின் உதவியையும் பெறமுடியும் என்று நமது தந்தையர் நம்பினர்!

எல்லாக்கெடுதிகளுக்கும் காரணகர்த்தா பேய் தான் என்று, அதே வேளையில், அவர்கள் நம்பிக்கை வைத்ததில்லை என்பதைக்காணும் பொழுது அவர்கள் கொண்ட கருத்து, போக்கு சரியில்லையென்பது விளங்கும். கடவுளின் மீது நம்பிக்கை வைக்காத காரணத்தால், கடவுளை உதாசீனம் செய்ததால் தான் பஞ்சமும், கொடும் வெள்ளமும், புயலும், பூகம்பமும் போரும், கடும் வியாதியும் ஏற்பட்டன; இந்தக் கேடுகள் கடவுளால் சில வேளைகளில் அனுப்பப்பட்டன என்றும் அவர்கள் நம்பினார்கள்! இந்தக் கேடுகளைக் கண்டபொழுது முழங்காலிட்டு வெளிர்த்த உதடுகளுடன் 'கடவுளே காப்பாற்று!' எனக்கதறினர்; தங்கள் குறைகளைக் கூறிப் பிரார்த்தனைகளாலும், கதறல்களாலும் கடவுள் மண்டலங்களை நிரப்ப நினைத்தனர்!

குருமார்கள், பிரார்த்தனைகள் வழியாகவும் பரிசுத்த பீடத்தில் விழுந்து வணங்கியும், வேதச்சின்னங்களை முத்தமிட்டும், பரவிய கொடும் வியாதியை நிறுத்த முயன்றனர். ஆனால் இவர்கள் பிரார்த்தனைகள் கேட்பாரற்று காற்றுக் கூச்சலாகவே ஆயின! பரவிய வியாதி தனது கொரேத் தன்மையைப் பரப்பிக் கொண்டேதான் போயிற்று!

பரிதாபத்துக்குரிய நமது மூதாதையர் விஞ்ஞானத்தின் விசும்பைக்கூடத் தொட்டுப் பார்த்ததில்லை; விஞ்ஞானமே அவர்கட்குத் தெரியாது! ஏதாவது சம்பவங்கள் நடந்தால் அதனுடன் ஆவிகளை—நல்லது அல்லது கெட்டது—ஒட்ட வைத்து, தேவதைகள் அல்லது பிசாசுகளை இணைத்து, கடவுள் அல்லது பேய்களைச்சிருஷ்டித்து சம்பவங்கள் நடந்தமைக்கு இவைகளே காரணமென்று உருவாக்கினர்!

அவர்களுக்கு நாம் கூறும் இயற்கையான காரணம் விளங்கவில்லை. 'ஏதாவது நிகழ்ந்தது என்றால்' அது ஆவியின் செயல்தான்; எல்லாம் நமக்குத் தெரியாத நம் அறிவிற்கு எட்டாத ஏதோ ஒன்றால், ஏற்பட்டது என்றும், உலகில் நடைபெறும் கெட்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் கெட்ட ஆவிகளாலேயே நிகழ்ந்தன வென்றும், அக்கெட்ட ஆவிகளே அழிக்கவும், தவறான வழியில் கொண்டு போகவும், தண்டிக்கவும் மனிதக் குழந்தைகளுக்குக் கேடு உண்டாக்கும் சக்திவாய்ந்தவை யென்றும் நம்பினர்.

"சுவர்க்க விருந்தினரும் நரக ஆதிபத்தியக்காரரும் போராடும் போராட்டக்களமே உலகம்!" என்றும் எண்ணப்பட்டது.

* *

'ஆராய வேண்டும் என்ற' அறிவுத் தீ கொழுந்து விட்டெரியும் மூளையையுடையவன், காரணங்கண்டு பரிசீலனை செய்பவன், உண்மையாகவே சிந்தித்துப் பார்ப்பவன், 'இதுநிஜமா' இருக்குமா? எப்படி? என்று எண்ணங்களை ஆராய்ச்சித்தராசில் எடை போடுபவன் எவனும், கெட்டநாள் நல்ல நாள் என்பதையோ, "இந்த எண்ணிக்கைநல்லது செய்யும்அந்தநம்பர்கேடுஉண்டாக்கும்' என்பதையோ, சகுனங்களையோ, நம்பமாட்டான்! அவனுக்கு வெள்ளியும் வியாழனும் ஒன்று தான்; பன்னிரண்டைவிட பதின் மூன்று ஒன்றும் சாதித்து விடமுடியாதது; என்பதெல்லாம் தெரியும்! வைரம், மாணிக்கம் அல்லது சாதாரணக் கண்ணாடி ஆகிய எந்தக் கல்லைப் போட்டுக் கொண்டாலும் என்ன ஏற்படுகிறதோ அல்லது ஏற்படாமலிருக்கிறதோ அதுதான் சிவதாதுக்கல்லைப் போட்டுக் கொண்டாலும் ஏற்படும் என்று அவனுக்குப் புரியும்! மலருடைய இதழ்கள் அல்லது ஆப்பிள் பழத்திலுள்ள விதைகள் கூடியிருப்பதாலோ அல்லது குறைந்திருப்பதாலோ, ஒரு பெண்ணின் திருமண வரன்களில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்றும் அவனுக்குத் தெரியும்!

இடது தோளுக்கு மேல் சந்திரனைக் கண்டதால் ஏற்பட்ட பலாபலன்களே வலது தோளுக்குமேல் கண்டாலும் ஏற்படும் என்பதையோ, முதன் முதலில் காட்சிசாலைக்கு (Theatre) வந்தவன் வளைந்த காலினனாக கூனல்முதுகினனாக, கோணல் பார்வையினனாக இருக்கின்றனா அல்லது 'அபால்லோ' வைப்போல் வீர உருவத்துடன் இருக்கின்றனா என்பதையோ, பற்றி எவனும் இப்பொழுது கவலைப் படுவது கிடையாது!

(வரும்)

## மாநாட்டிற்கு வருவோர்

### அனைவரும் கருப்புச் சட்டை அணிக.

★

தூத்துக்குடியில் 18வது திராவிடர்கழக மாகாணமாநாடு மே. 1, 2-வ களில் நல்லமுறையில் நடைபெறஇருக்கிறது. தற்போது இருக்கும் சூழ் நிலையில் இம்மாநாடே திராவிடப் பெருங்குடி மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய தன்மையில் இருக்கிறது. எனவே மாநாட்டிற்கு வரும் தோழர்கள் அனைவரும் கருப்புச் சட்டை அணிந்திருக்க வேண் டும். கருப்புச் சட்டை இல்லாத தோழர்களும் தயார் செயது கொள் ளுங்கள். கருப்பை எங்கு நோக்கினும் என்று காணச் செய்கிறோமோ அன்றே நமக்கு வெற்றி! வெற்றி. கருப்புச் சட்டை அணிவதே வெற்றி!!!

கே. வி. கே. சாமி.
செயலாளன்.



# குடி அரசு

10—4—48 சனிக்கிழமை.



## வாரீர்! வாரீர்!! வந்து சேருவீர்!!!

★

"தூத்துக் குடியில் நடைபெற விருக்கும் 18-வது மாகாண மாநாட்டு நிதி வசூலுக்காக தோழர்களான வள்ளிமுத்து, நீதிமாணிக்கம், சண்முகம், நடராசன் ஆகியோர் பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்திருக்கின்றார்கள். தொடர்ந்தும் செய்வார்கள். மாநாட்டுப் பந்தல் 315×215 அடி அளவில் போடுவதற்கு ஏற்பாடு. கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகள், எங்கிருந்து கேட்டாலும் எட்டும்படிக்கான ஒலிபெருக்கிகள். மாநாட்டுப் பந்தலுக்கு அருகாமையிலேயே வெளியூர்ப் பிரதிநிதிகள் தங்குவதற்கும், உண்பதற்கும் இடம். குடும்பத்துடன் வரும் தோழர்களுக்குத் தனி இடம். நடிகவேள் தோழர் ராதா அவர்களின் "சர்வாதிகாரி" என்ற நாடகமும் நடைபெறும்."

இந்த மாநாடு நடைபெறுவதற்கு இன்னும் 20 நாட்கள் தான் இருக்கின்றன. இந்தச் செய்திகளை எல்லாம் தோழர்கள் அறிந்திருக்கலாம்.

மாநாட்டு நிதி வசூல் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தோழர்கள், தங்கள் தங்கள்கோட்டாக்களை விரைவில் அனுப்பிக் கொடுப்பதற்கு அங்கங்கேயுள்ள சௌகரியமுள்ள அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

மாநாட்டிற்கு வசதியுடைய ஒவ்வொரு தோழர்களும் புறப்பட்டு வந்து சேருவார்கள்; தொலைவு, தூரம் தொல்லை என்ற சாக்குப் போக்குகளை எண்ணித் தளர்ச்சியடையமாட்டார்கள் என்பது நமது உறுதியான எண்ணம்.

பணக்காரர்கள், ஜரிகைக் குல்லாய்க்காரர்கள், ஜமீந்தார்கள் ஆகியோருக்கே சொந்தமாயிருந்த நீதிக்கட்சி, பாட்டாளி மக்களுக்குச் சொந்தமாக மாறியது எப்போது? மண் வெட்டியையே தூக்கத் தெரியாத பரம்பரையில் புழுத்த சத்திய மூர்த்தி "20000 அடி ஆழத்தில் குழிதோண்டிப் புதைத்தேன்" என்று கூறிய கூற்றைப், பொய்க்கூற்றாக்கி அவர் ஒரு பொய் மூர்த்தியே என்பதை இதனாலும் நிரூபித்து லட்சக்கணக்கான இளங்காளையர்களும் வீர வனிதையர்களும் உழைப்பையும், வாழ்வையும் அர்ப்பணிக்க முன் வரும்படியான மக்களியக்கமாக மாற்றியது யார்?

பணக்காரர்களின் தலைமை மாறி, பாட்டாளிகளின் பாதுகாவலராய், உழைப்பாளிகளின் உற்ற துணையாய், தாழ்த்தப்பட்டோர் தலை நிமிர, ஒடுக்கப்பட்டோர் உயர, உபாயங் கண்டு பட்டி தொட்டி மூலை முடுக்கு சந்து பொந்து எல்லாம் அயராது, தளராது சென்று, சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் சளைக்காது பேசி, அறிவின் பிழம்பாய் ஆற்றலின் பொக்கிஷமாய், மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மாபெரும் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள், நீதிக் கட்சித் தலைமையை ஏற்றபொழுதுதான் இந்த மாறுதல் ஏற்பட்டது என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

திராவிடத்தின் தந்தை பெரியார் அவர்கள் தந்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு, பெரியாரவர்களைத் தலைவராகக் கொண்ட பிறகு, இதுவரை நடந்திருக்கும் மாகாண மாநாடுகளையும், அவைகள் எங்கெங்குச் சூழ்நிலையில் கூடியன என்பதையும், அவ்வாறு கூடிய மாநாடுகள் இயக்கத்தின் வளர்ச்சியில் எவ்வெவ்வாறு ஒவ்வொரு திருப்பங்களாக (டேர்னிங்) இருந்து வந்திருக்கின்றன என்பதையும் தோழர்கள் இந்நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்னை, திருவாரூர், சேலம், திருச்சி ஆகிய நான்கு ஊர்களிலும் நடந்த மாகாண மாநாடுகள்தான் நீதிக்கட்சித் தலைமையைப் பெரியாரவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு நடந்தவைகளாகும். இந்த நான்கு ஊர்களிலும் நடந்த மாநாட்டின் பயனாகத்தான், அவைகளின் திட்டப்படிதான், இயக்கம் இப்போதைய நிலையை அடைந்திருக்கின்றது.

இப்போது நடைபெறவிருக்கும் 18வது மாநாடும், நிச்சயமாக நம் இயக்கத்தில் ஒரு திருப்பமாக விளங்கும் என்கிற உண்மையைத் தான், எவரும் எதிர்பார்க்கவும் முடியும்; நடைபெறவும் வேண்டும். ஆனால் பெரிய ஒரு மாறுதல் என்றெல்லாம் பலர் நினைக்கிறார்களே, அம்மாதிரி நினைப்பதற்கு நாட்டு நிகழ்ச்சியில் எதுவும் பெரிய ஒரு மாறுதலையடைய வில்லை என்பதுதான் நமது கருத்து.

47ல்கொடுத்து வாங்கிய சுயராஜ்ஜியம், சுகராஜ்ஜியமில்லை; அதனால் அதற்குப் பெயர் சுயராஜ்ஜியம் என்பதும் பொருந்தாது, என்று நாம் கூறிவந்திருக்கின்றோம்—ஏன்—அந்த சுயராஜ்ஜியம் நமக்குத் துயராஜ்ஜியம் என்றும் கூறினோம்.

வெவ்வேறு பாதைகளில் சென்றவர்களும், செல்ல விரும்பியவர்களும் அன்று இதை ஒப்புக் கொள்ளத் துணிவு பெறவில்லை. ஆனால் இன்று என்ன காண்கிறோம்? காங்கரஸ்காரர்களுக்குள்ளாகவே "இது சுயராஜ்ஜியம்மல்ல" "முதலாளிகளின் சுரண்டல் ராஜ்ஜியந்தான் இது'. "இனிக் காங்கரஸ் தேவையில்லை". "தனியாகப் பாட்டாளிகளுக்கென்று தனிக் கட்சி வேண்டும்". என்றெல்லாம் பேசுகிற பேச்சுக்களை இன்று கேட்கிறோம்.

வெள்ளையரும்—பனியா பார்ப்பனக் கூட்டுறவில் தோன்றிய காங்கரஸ்காரர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இன்று காங்கரஸ் கட்சியினர் நாட்டையாளுகிறோம் என்று பேர் பண்ணிக் கொண்டிருந்தாலும், இந்த ஆட்சியினால் எவ்வித நன்மையையும் உழைப்பாளிகள் அடையமுடியாது என்று நாம் கூறி வருவதை உணர முடியாதவர்கள்கூட, இதுவரை இந்த ஆட்சியினால் எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடவில்லை என்பதையும், அதற்கு மாறாக கொலையும் கொள்ளையும் பெருகி, விபசாரமும் கற்பழித்தலும் விரிவடைந்து, சோற்றுப்பஞ்சமும் துணிப்பஞ்சமும் நிறைந்து, ஏமாற்றமும் பித்தலாட்டமும் வளர்ந்து, யோக்கியதையும் உண்மையும் உள்ள மனிதன் அச்சமின்றி ஆபத்தின்றி வாழ முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

கங்காணியாக விளங்கிக், காங்கரஸ் இந்த உபகண்டத்தின் பெரும்பகுதியை யாளும் ஒரு சந்தர்ப்பத்தை இன்று பெற்றிருக்கின்றது. மற்றையக் கட்சிகளையெல்லாம் மாய்த்துவிட வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்து, பனியாக்களும் பார்ப்பனர்களும் பவனி வரவேண்டுமென்று ஆசைப்படுகின்றது. அதனுடைய விளைவுதான் அம்பேத்காரைத் தலைவராகக் கொண்டு வருக்கப்பட்டிருக்கும் அரசியல் நிர்ணயத்திட்டமும், ஏனைய அரசியல்கட்சிகளின் மீது போட்டிருக்கும் தடைஉத்தரவுகளும் ஆகும்.

அரசியல் நிர்ணய சபையை இந்த நாட்டு மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்று எவனாவது எண்ணுவானாயின் ஒன்று அவன் அரசியல் அவிவேகியாக இருக்கவேண்டும். இன்றேல் ஏமாற்றும் சூதுக்காரனாயிருக்க வேண்டும். ஏன்? அ. நி. சபைக்கு எப்படி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

சட்டசபையில் இன்று பெரும்பான்மை போராய் இருக்கிற காங்கரஸ்காரர்கள், அந்தந்தமாகாணங்களிலிருந்தும் தங்கள் தங்கள் விகிதாச்சாரப்படி, காங்கரஸ் மேலிடத்தின் உத்தரவுப்படி, ஒரு மெம்பருக்கு ஒண்ணே முக்காலரைக்கால் ஓட்டைக் கொடுத்து அ. நி. சபைக்கு அனுப்பியிருக்கின்றார்கள். இந்த மெம்பர்களுக்கு "வடநாட்டு சிபார்சு" என்கிற தகுதியைவிட வேறுதகுதி ஏதேனுமுண்டா? நம் மாகாணத்தை எடுத்துக்கொண்டால், நம்மாகாணத்து மக்களுக்கு, இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கும் இவர்கள் எப்படிப் பிரதிநிதிகளாய் இருக்க முடியும்? இவர்களைப் பிரதிநிதிகள் என்று நியமிப்பதற்குத்தான் மாகாணச் சட்டசபை மெம்பர்களுக்கு என்ன உரிமை? என்ன தகுதி? சட்டசபைக்குச் சென்ற காலத்தில், இவர்கள் நாங்களே அ. நி. சபைக்கும் மெம்பர்களைத் தேர்ந்தெடுப்போம் என்று கூறியா சென்றார்கள்? ஜனநாயகத்திற்கு மதிப்புத்தர மனதால் எண்ணும் எந்த ஒரு அரசியல் தலைவனாவது, இதனை ஜனப்பிரதிநிதிசபை என்று ஒப்புக்கொள்வானா?

பணநாயகத்திற்கே பிரதிநிதியான காங்கரஸ், ஜனநாயகத்தை மனதால் எண்ணவும் முடியாது என்பதும், ஜனநாயகத்தின் பக்கம் காங்கரஸ் தலை வைத்துக்கூடப் படுக்காது என்பதும்தான் நெடு நாளையக் காங்கரசின் போக்கு. அதுமட்டுமல்ல, காங்கரஸ் என்றைக்குமே இந்த உபகண்டத்து மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. இதை நம் தலைவர் பெரியாரவர்கள் புட்டுப் புட்டுச் சொல்லி வந்திருக்கின்றார்கள்.

18 கோடி இந்துக்களுக்கும் தானே பிரதிநிதி என்கிறது இந்து மகாசபை. 4 கோடி முஸ்லிம்களோ இன்னும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றார்கள். 7 கோடிக்கு மேலான தாழ்த்தப் பட்டவர்களோ, தாழ்த்தப் பட்டோர் சம்மேளனம் என்று தனியாக ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சீக்கியர்களுக்கும்கிறிஸ்துவர்களுக்கும்பார்சிக்காரர்களுக்கும் தனித் தனியே வெவ்வேறு ஸ்தாபனங்கள். இனத்தின் பெயரால் 6 கோடி திராவிடர்களுக்கும் தானே பிரதிநிதி என்கிறது திராவிடர் கழகம். இவ்வாறு ஒவ்வொருவரும் சொல்லுகிற கணக்கைக் கூட்டினால் காங்கரஸ் இந்தப் பிரிந்த உபகண்டத்தில் எத்தனை பேருக்குப் பிரதிநிதியாக இருக்கமுடியும்?

படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் ஓட்டுரிமை என்ற சட்டம் இருக்கும்போது, 100க்கு 10 பேர்கூடபடித்திருக்காதஇந்நாட்டில்ஒரு தேர்தல் நடக்குமானால், அதில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களானால் அவர்கள் யாருக்குப் பிரதிநிதிகள்? படித்த பணக்காரர்களான 100 க்கு 10 பேருக்குப் பிரதிநிதிகளா? படியாத ஏழைகளான 100 க்கு 90 பேருக்குப் பிரதிநிதிகளா?

காங்கரஸ் ஸ்தாபனம் இந்துக்கள், முஸ்லிம்கள் திராவிடர்கள் கிறிஸ்துவர்கள், பார்சிகள், சீக்கியர்கள் ஆகியவருப்பாரில், எல்லாப் பணக்காரர்களுக்கும் இடங் கொடுத்து அவர்கள் ஆதிக்கத்திற்கு அடி பணிந்து, படித்தவர்களிலே பலரைக் கூலிக்கு மாரடிக்க வைத்திருக்கிறதே தவிர, அது எல்லா மக்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வதும், யாரிடத்திலாவது எப்படியாவது ஒப்புவித்துவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்ட வெள்ளையன் அதனோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும், மோசடியான செயல் என்று முன்பு கூறியதைத்தான் நாம் இப்பொழுதும் வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

நாட்டு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத வகையில், 100க்கு 10 பெருக்கே ஓட்டுரிமை என்ற திட்டத்தில், அந்தந்த வகுப்பிலுள்ள பெரும்பாலான பாட்டாளிகளை வஞ்சித்து ஏமாற்றித்

---

## நடக்க விருப்பது.

பள்ளபட்டியை அடுத்த இனுங்கனூரில் 15—4—48 தேதி வியாழக்கிழமை இரவு 7-30 மணிக்கு திராவிடர்கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். அதுபோது பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் விருதை ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள். பெரியார் அவர்களுக்குப் பணமுடிப்பு அளிக்கப்படும்.

கொழுக்கும் சில பணக்காரர்கள், படித்தவர்களுக்குள் பல பிரிவு உண்டாகி, அப்பிரிவுக்குள் ஏற்பட்ட போட்டியில் இன்று சட்டசபைகளில் பெரும்பான்மையாயிருப்பது தான் காங்கரசு மெஜாரிட்டி.

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனியே ஸ்தாபனங்கள் இருக்கும் போது, பல பிரிவுகளிலுள்ள உதிரிகள் கூடிய கட்சிதான் காங்கரஸ் என்பதும், சந்தர்ப்பம் வந்தால் உதிரிகள் ஓடிப்போய்விடும்; அவைகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன என்பதும், காங்கரசின் நடப்பிலிருந்து சுயமாகச் சிந்திக்கும் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டவைகளாகும்.

அப்படியானால் இன்றுள்ள சட்டசபை, மேலிடத்து உத்தரவுப்படி அ. நி. சபைக்கு நியமித்திருக்கும்மெம்பர்களும், அவர்கள் வகுத்திருக்கும் திட்டமும் மக்களுக்கு எந்த வகையில் பொறுப்புடையதாயிருக்க முடியும்? சமவுரிமை அடிப்படையில் சமதர்மத்திட்டத்தைக் கையில் கொண்டு சுரண்டலற்ற திராவிடத் தனியரசை அமைக்கத் துடிதுடித்து நிற்கும் திராவிடர் கழகம் தான் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இந்த அரசியல் நிர்ணயத் திட்டம் திராவிடர்களை எந்த வகையிலும் பாதிக்கவே பாதிக்காது. இதைத் தெளிவுபடுத்தவேண்டியதும், இதை யொட்டி இனி நாம் நம்முடைய போக்கில் எந்த அளவுக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதும், தடை உத்தரவுகளை வாரி வாரி வழங்கும் காங்கரஸ் மந்திரிகளின் போக்குக்கு முடிவு கட்டவேண்டியதும், இந்த மாநாட்டில் முக்கியமான பிரச்னைகளாக விளங்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே அங்கங்கேயுள்ள வசதி படைத்த தோழர் ஒவ்வொருவரும் கட்டாயமாகத் தூத்துக்குடி புறப்படவேண்டும்! கருப்புடையை அனைவரும் அணிய வேண்டும்! இழிவு நீக்கப்போரில் இத்தனைபேர் தயார் என்ற எண்ணிக்கையைக் காட்ட வேண்டும். பெறுவோம் திராவிடநாடு! இன்றேல் இடுகாடு! என்ற பேரிகையைப் பேரிடியாக முழக்கவேண்டும். வாரீர்! வாரீர்! வந்துசேருவீர்!

# தூத்துக்குடி மாநாடு.

—:?:—

## சில குறிப்புகள்.

★

பல ஆயிரம் மக்கள் குழுமியிருக்கும்படியான மாபெரும் பந்தல், 20 ஒலிபெருக்கிகள், கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகளுடன் விளங்கும்.

மாநாடு V. O. C. (தருவை) மைதானத்தில் நடைபெறும்.

வெளியூர்ப் பிரதிநிதிகளுக்கு மாநாட்டுப் பந்தலுக்கு அருகாமையிலேயே உணவு வசதி, தங்க இடம் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

குடும்பத்துடன் வருபவர்கள் முன்னதாகவே தெரிவித்துவிட்டால், அவர்களுக்குத் தனி இடம் வசதி செய்து கொடுக்கப்படும். மாநாட்டுப் பந்தலிலும் பெண்களுக்குத் தனி இடம் உண்டு. கட்டணம் இல்லை. இரண்டுநாள் மாநாட்டு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்ட பெண்களுக்கு மட்டும் தான் நாடகத்திற்கும் இலவசமாக அனுமதிக்கப்படும்.

பிரதிநிதி கட்டணமும், பார்வையாளர் கட்டணமும் ரூபாய் ஒன்று தான். இதர விவரம் வேண்டுவோர் உடன் எழுதுக.

கே. வி. கே சாமி,
சயலாளன்.

## மாயவரம் தோழர்களே! இது உண்மைதானா?

★

தோழர் கைவல்யம் அவர்கள் பேருக்கு 'குடி அரசு, விலாசமிட்டு மாயவரம் தோழர் தி. கோ. இராசன் என்பவரால் கீழ்கண்ட கடிதம் எழுதி அனுப்பப் பட்டிருக்கிறது. அதில் கண்ட சம்பவங்கள் உண்மைதானா எனத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

(ஆ-ர்)

மாயவரம்,
3—4—48

அய்யா, இவ்வூரில் சில தினங்களாக தோழர் மதுரை மாரியப்ப சுவாமிகள் அவர்களின் உறவினர்களில் ஒரு பெண்ணுக்கு சாதாரணமாக உட்கார்ந்திருக்கும் பொழுது புடவைப்பற்றி எரிகிறது. சிறிது நேரங்கழித்து மறுபடி வாயிலிருந்து நெருப்புக் கட்டிகள் விழுகின்றன. மறுசில நேரங்கழித்து, கடிக்கிறது கடிக்கிறது என்று கூச்ச லிட்ட பிறகு கையிலிருந்து ரத்தம் வடிகிறது. காயம் குரங்கு கடித்த மாதிரி பற்கள் பதிந்திருக்கின்றன. அரைமணி நேரத்துக்கெல்லாம் காயம் ஆறிவிடுகிறது. காதிலிருந்து எண்ணெய்த்திரிகள் வருகின்றன. இதோ பார் என்று அந்தப்பெண் சொல்லும் பொழுது சுவற்றில் கரியினால் எழுதப்படுகிறது. உருவம் இல்லை. புடவை எரிந்து பொத்தல் பொத்தலாய் அப்படியே இருக்கிறது. எண்ணெய்த் திரியையும் அப்படியே சேகரித்து வைத்திருக்கிறார்கள். தீப்பிடிப்பதால் உடலில்புண் ஏற்படுவதில்லை. கிணத்தில் தண்ணீர் எடுக்கும் பொழுது, ஒரு பக்கத்தில் முகத்தில் கரிக்கோடால் மீசை இழுக்கப் பட்டிருக்கிறது. மீண்டும் ஒருதரம் மொள்ளும் பொழுது மற்றொரு புறமும் கரியினால் மீசை இடப்பட்டிருந்தது. இதை நானும் மற்றும் பல தோழர்களும் நேரில் பார்த்து எங்களுடைய அறிவிற்குப் புலப்படாத புதுமையாய் இருப்பதனால் தாங்கள் தயவு செய்து அதனுடைய விவரத்தை, எதனால் இப்படி உண்டாகிறது என்று பொருத்தமான பதிலாக உடனே தெரிவிக்க வேண்டுமாறு மிக பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்
தி. கோ. இராசன்.

## தேவை.

போதுமான ஆங்கில அறிவும், "டைப்" அடிக்கும் திறனும் பெற்ற ஒரு கிளார்க் தேவை. தகுதியையும் விரும்புகிற ஊதியத்தையும் குறிப்பிட்டு உடனே விண்ணப்பிக்க வேண்டும்.

நிர்வாகி, "குடி அரசு" ஈரோடு.

நாடக விமர்சனம்:

# வேலைக்காரி.

★

காலவேகத்தினாலும், புதுமைமோகத்தினாலும் மக்கள் புராண நாடகங்களை அறவே வெறுத்துத் தள்ளவும், இனிச் சமூக நாடகங்களைத் தவிர வேறெதற்கும் மதிப்பில்லை என்ற நிலைக்கு வந்தனர் தமிழ் நாடக அமைப்பாளர்கள். ஆயினும் இன்று வரை நடைபெற்று வரும் பல சமூக நாடகங்களைப் பார்க்கும்போது 'சமூக நாடகம்' என்பதற்கு உண்மையான பொருளென்ன என்று அவர்கள் உணர்ந்துகொண்டதாகவே தெரியவில்லை. 'ஜிகினா' உடைகளுக்கும், அட்டை முடிகளுக்கும், 'டோபா' மயிருக்கும் பதிலாக சூட்டும், கோட்டும், தொப்பியும் வந்ததே தவிர—ரகுராமனுக்குப் பதில் சுகுமாரனும், சீதாவுக்குப் பதில் சியாமளாவும் வந்தார்களே தவிர கருத்திலோ, அடிப்படைக் கொள்கையிலோ எள்ளளவு மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காரணம், கம்பெனி முதலாளிகளுக்கும் மனமாற்றம் ஏற்படுவதில்லை; அவர்களுக்குக் கதையெழுதுவோரும் அதுவரை சீதா கல்யாணமும், திரௌபதை வஸ்திராபரணமும் எழுதியவர்களாயிருப்பார்கள். இம் முறையில் சமூக நாடகங்கள் தொடங்கப்பட்டதைநோக்குகையில் "புராணமே பரவாயில்லை" என்ற எண்ணங்கூட ஏற்பட்டது.

ஆனால் காலம் இதற்கு இடந்தரவில்லை. தமிழ் நாட்டில் சமூகச் சீர்திருத்தமே உயிர் நாடியாகக் கொண்டுள்ள ஒரு இயக்கமும், அதிலே ஒப்பற்ற ஓர் அறிஞரும் இருப்பதை உணர்ந்து, பயன்படுத்த ஒருகம்பெனிக்காரரும் துணியாத நேரத்தில் "வசூலாகுமா?" என்று தோன்றிய அய்யப்பாட்டையும் உதறித் தள்ளிவிட்டு அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் எழுதிய நாடகங்களை முதன் முதலாக நடிக்கத் துணிந்தனர் கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையார். தஞ்சையிலே 'ஓர் இரவு'ம், 'வேலைக்காரி'யும் நூற்றுக்கணக்கான நாட்கள் தொடர்ந்து நடைபெற்று, மற்ற கம்பெனிக்காரர்களுக்கு விழிப்பையும், வியப்பையும் உண்டாக்கின.

தஞ்சையில் ஏராளமான ஆதரவுடன் நடத்தி வந்த கே. ஆர். ஆர். கம்பெனியார் சென்ற சில மாதங்களாகத் திருச்சி ரெத்தினவேலுத் தேவர் மன்றத்தில் தங்கள் நாடகங்களை நடத்தி வருகின்றனர். இப்போது 'வேலைக்காரி' நாடகம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

பணத்திமிரும், ஜாதி வெறியும் கொண்ட மிராசுதார் வேதாசலம் பணமூட்டை, பக்திவேஷம் ஆகியவற்றால் தனது பழிச் செயல்களை மறைத்து வருவதும், வெளி வேஷத்தில் மயங்கும் உலகம் அவனை உண்மையிலேயே பெரியமனிதன் எனமதிப்பதும், தந்தையைக் காப்பாற்றத் தனயன் சிலோன் தோட்டஞ் சென்று பொருளீட்டித் தந்தையைக் காண ஆவலுடன் மீளுகையில், பணக்கார வேதாசலத்தின் நெருக்கடியில் தந்தை தற்கொலை செய்து கொண்டதைக் கண்டு தவிப்பதும், அவனைப் பழிக்குப்பழி வாங்கத் துடிப்பதும், உலகப் படிப்பும், அனுபவப் படிப்பும் அதிகமாகப் பெற்ற மணியின் யோசனைப்படி வேதாசலத்தை மெள்ள மெள்ளச் சித்திரவதை செய்யத் திட்டமிட்டு ஆனந்தன் பரமானந்தனாகமாறுவதும், பணக்காரன் மகளான சரசா, தானும் பண வெறிகொண்டு வேலைக்காரி அமிர்தத்தைக் கொடுமைப்படுத்துவதும், வேதாசலத்தின் மகன் மூர்த்தி வேலைக்காரியின் மேல் காதல் கொண்டிருந்தாலும் பண ஆசையாலும், ஜாதிப் பித்தினாலும் அதை வெளிப்படுத்த விரும்பாமல் இருப்பதும், ஆனந்தன்—மணி சதியாலோசனைப்படி ஆனந்தன் சரசாவை மணந்து, வேதாசலத்தின் மருமகனாகி நாளடைவில் தான் குடிகாரனைப் போலவும், கூத்திக் கள்ளனைப் போலவும் நடிப்பதும், மூர்த்தியின் மனம் காதல் விஷயத்தில் தெளிவில்லாதிருப்பதால் வேதாசலத்திடம் கோள்மூட்டி ஆனந்தன் மூர்த்தியை வீட்டிலிருந்து வெளியேற்றுவதும், வேலைக்காரி அமிர்தம் வேதாசலத்தினால் விரட்டப்பட்டு ஊரைவிட்டுச் செல்வதும், சென்னையில் பர்மா பாலுவின் பைத்தியத்தைத் தெளிய வைத்து அவரது மகளாக வாழ்ந்து வருவதும், வீட்டினின்று வெளியேறிய மூர்த்தி மனச்சாந்திபெற ஹரிஹர கோஷ் ஆசிரமம் சேர்ந்து இருக்கும்போது, இரவில் கோஷ் குடித்துக் கோமளவல்லியுடன் குதூகலப்படுவதைக் கண்டு ஆத்திரத்தால் அவனைக் கொலை செய்து, அதற்காகக் கைது செய்யப்படுவதும், இதற்கிடையில் தன் மாமனாருடன் சண்டையிட்டுக் கொண்டு, மனைவி சரசாவின் பணத்திமிரை ஒழிக்க அவளை வீதி வீதியாகக் காய்கறி விற்கச் செய்து, அதனை வேதாசலம் பார்த்து வேதனைப்படும்போது தான் மகிழ்வதும், பின்னர் மூர்த்தியை விடுதலை செய்யத்தான் வக்கிலாக வேடம் பூண்டு வாதாடி, கொலை செய்யப்பட்டவன் பெரிய கொள்ளைக்காரன் என்பதை நிரூபித்து மூர்த்தியை விடுதலை செய்து, அவனுக்குப் பர்மா பாலுவின் மகளை மணம் முடித்து இறுதியாகத் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தித் தன் பரிதாப சரிதையைக் கூறி, வேலைக்கார அமிர்தமே பாலுவின் மகள் என்பதையும் வெளியாக்கி வேதாசலத்தின் பணத்திமிரும், ஜாதி வெறியும் ஒழிந்த வகையை விளக்குவதும், வேதாசலமும் பாலுவும் சமூகச்சீர்திருத்தத்துக்குப் பாடுபடப் புறப்படுவதும் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்து கதைக்கு உயிர் கொடுக்கின்றன.

கதையின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை படிப்படியே வளர்ந்து வரும் விறுவிறுப்பும், சொல்வளமும் பொருட் செறிவும் வாய்ந்த அலங்கார வசனமும், உடுமலைக் கவிஞரின் உயிரும், பொருளும் சேர்ந்த பாடல்களும், கதையில் என்னென்ன சீர்திருத்தம் இருக்கின்றது என்று கேட்பதைவிட என்னதான் இல்லை என்று கேட்கக் கூடிய முறையில் தொகுக்கப்பட்டுள்ள சீர்திருத்தக் கருத்துக்களும் ஒன்று சேர்ந்து, சமுதாயச் சீர்திருத்தமென்றால் இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுமாறு அமைந்துள்ளது "வேலைக்காரி" நாடகம்.

நாடக அமைப்பு ஒருபுறமிருக்க, பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகத் தோழர்களும், கொண்ட வேடத்திற்கேற்ப, குறைகூற இயலாவண்ணம் உணர்ச்சி ததும்ப நடிக்கிறார்கள்.

ஆனந்தனாக நடிக்கும் தோழர் எஸ். எஸ். இராஜேந்திரன், மணியாகத் தோழர் எம். என். கிருஷ்ணன், மூர்த்தியாகத் தோழர் டி. எம். கருணாகரன், வேதாசலமாகத் தோழர் மருதப்பா, சரசாவாகத் தோழர் மகாலிங்கம், அமிர்தமாகத் தோழியர் சுபத்ரா, ஹரிஹர கோஷாகத் தோழர் டி. எம். கிருஷ்ணன், மற்றும் சில்லரைப் பாத்திரங்களாக நடிக்கும் எல்லாத் தோழர்களும் பாராட்டக்கூடிய முறையில் நடிக்கின்றனர், பேசுகின்றனர், பாடுகின்றனர். சிற்சில நடிகர்களுக்கு மட்டும் ஏற்றுக் கொண்டுள்ள பாத்திரங்களுக்குத்தக்க உடலமைப்பில்லை என்பதைத் தவிரவேறு குறைசொல்ல வழியில்லாத வகையில் வேஷப் பொருத்தமும் "மேக்கப்"பும் அமைந்துள்ளன.

அழகுக்கு அழகு செய்வது போல் கண்ணைக் கவரும் முறையில் ஓவிய நிபுணர் தோழர் வி. மாதவம்பிள்ளையவர்களால் தீட்டப் பெற்ற பின்னணிப் படுதாக்களும், 'செட்டிங்ஸ்' களும் விளங்குகின்றன. சினிமா முறையில் சில அற்புதமான "டெக்னிக்" குகள் கையாளப் படுகின்றன.

பன்னிப் பன்னிப் பலபல கூறிப் பயனில்லை. தினந் தினம் தவறாமல் பார்த்தாலும் அலுக்காத ஓரே நாடகம் "வேலைக்

# கூறுவது என்ன? நடப்பது என்ன?

★

### பைபிள்.

ஏசு கிறிஸ்து "ஒருவன் வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்டு'' என்று தான் கூறியிருக்கிறார் தனது பைபிளில்.

அந்தப் பைபிளை அன்றாடம் படித்து வருபவர்கள் தான் துப்பாக்கி முதல் அணுக்குண்டு வரை உற்பத்தி செய்து பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றனர்.

### குர்ஆன்.

முகமது நபி "சகல மக்களையும் சமமாகக் கருது'' என்று தான் கூறியுள்ளார்.

அதே குர்ஆனை அன்றாடம் படித்து வரும் பாக்கிஸ்தான் மக்கள் தான் மத வெறிகொண்டு பல்லாயிரக்கணக்கான முஸ்லீம் அல்லாத மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர்.

### வேதம்.

ஹிந்து மத, வேத சாஸ்திரங்களும் "சகல ஆத்மாக்களும், கடவுள் அம்சம் தான். ஒரே ஆத்மாதான் எல்லா உடலிலும் இருக்கிறது. ஆகவே அனைவரையும் கடவுளாகத் தான் பாவிக்கவேண்டும்'' என்று போதிக்கின்றன.

அப்படிப்பட்ட ஹிந்துக்கள் தான் பல்லாயிரக்கணக்கான முஸ்லீம்களைக் கொன்று குவித்தனர். மற்றும் இந்து மதத்தைச் சேர்ந்த உயர்ஜாதிப் பார்ப்பனர்கள் தான் உலக உத்தமர் காந்தியாரைக் கொல்லச்செய்தவர்கள்.

## இவற்றின் காரணம் என்ன? சிந்தியுங்கள்!

## கேளுங்கள்!........ கேளுங்கள்!!......

யார் யார் கள்ளமார்க்கெட் பண்ணி அதை மறைக்க மோட்டார்களில் வெளியே மூவர்ணக் கதர்க் கொடிகளைக் கட்டிச் செல்லுகிறார்களோ—கதர் தொப்பி போடுகிறார்களோ அம்மாதிரி பேர் வழிகள் தான் இன்று காங்கரஸ் காரர்களாகி விட்டார்கள்!

* *

**சூத்திரப்பட்டத்தை ஒழிப்பதற்கு யார் என்ன பாடுபட்டாலும் பிராமணன் உள்ளவரை சூத்திரன் இருந்து தானே தீருவான்.**

இப் பொழுதிருக்கும் காங்கரஸ் பழைய காலத்துக் காங்கரஸ் அல்ல. எப்போ சுயராஜ்ஜியம் பெற்றாகி விட்டதோ அதற்கு இனி வேலை இல்லை. அதன் தன்மையே மாறிவிட்டது.

* *

பிரிட்டிஷார் ஆளும்பொழுது இருந்தது போலவே இன்னும் சமுதாயத்தில் ஒரு பக்கம் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கட்டிக் கொண்டு பணக்காரர்கள் சிலர் தர்பார் நடத்தி வாழ மற்றொரு பக்கம் கோடானு கோடி ஏழைமக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, ஒண்டக் குடிசையின்றித் தவித்து உழன்று வருகிறார்கள்.

* *

சாதித்துவேஷ சுலோகங்களுக்குப் பதிலாக "ஜாதிகள் ஒழிக'' என்று சொல்லுங்கள். நம் நாட்டில் ஜாதிப் பிரிவினை இல்லாத ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும்.

* *

தங்கள் காரியத்தைச் சாதிக்க கம்யூனிஸ்டுகள் எதையும் செய்வார்கள்.

—தோழர் ஜெயப்பிரகாச நாராயணன்.

---

காரி''. பழமைக்குச் சாட்டையாயும், சிந்தனைக்கு விருந்தாயும், பணக்காரர்களுக்கு 'எமனா'யும், படித்தவர்க்கு அன்பனாயும், புதுமைக்கு வழி காட்டியாயும், சீர்திருத்தத்துக்கு இருப்பிடமாயும் விளங்குகிறது "வேலைக்காரி''. தமிழ் மக்களனைவரும் ஆடவர், பெண்டிர், வயோதிகர், வாலிபர் யாவரும் பேதா பேதமின்றிப் பார்த்து ரசித்து உணரவேண்டிய நாடகம் "வேலைக்காரி.''

எஸ். கருணானந்தம்.

---

[5ம் பக்கத் தொடர்ச்சி]

போலப் பார்த்தன. அவள் முகத்தில் பயத்தின் சாயல்! கடைக்கண்ணால் அவனை அவள் அழைத்தாள். எழுந்தான், எதிரே அவள் தந்தை! அவர் அவனை ஏதோ கேட்டார். அவன் என்ன பதில் சொன்னானோ, அவனுக்கே தெரியாது. அவன் அவ்விடம் விட்டு அகன்றான்! அவர் ஏன் அங்கு வந்தார்; என எண்ணினான். அன்று அம்பிகாபதியைக் கலைவாணி (?) காத்தாள், இன்று செல்வியின் கடைக்கண் என்னைக் காத்தது என இறுமாந்தான்! காதல் வளர்ந்தது! நாட்கள் சென்றன!

பாண்டியன் ஏழை! ஆனால் கோழையல்ல! செல்வி அப்படியல்ல! பாண்டியனுக்காக வாதாடினாள். செல்வி. அவள் துணிந்திருந்தால், அவன் வாழ்க்கையை வளமாக்கி இருக்கமுடியும்! அவன் வாழ்க்கை மட்டுமா? அவள் வாழ்க்கையையுந்தான்!

சமுதாயக் கட்டுப் பாட்டுக்கு முன்னால், தன் காதலைப் பலியிட்டாள், செல்வி! சாதி வித்தியாசத்தை விடாமல் பிடிக்கும் சண்டாளர்களின் முன்னால் இரு உள்ளங்கள் உடைந்தன! 'காதலை' காகிதத்திலே கண்டு மகிழும் உலகத்தின் முன்னால் காதலர் இருவரின் வாழ்வு வதைக்கப்பட்டது! துக்கமென்றால் என்ன என்று அறியாது இருந்த பாண்டியன் நெஞ்சில் சோகத்திரை படர ஆரம்பித்தது! இன்பம் ஊட்டி வந்த செல்வி......? அவனால் எண்ணவே முடியவில்லை!

அவன் நிலவைப் பார்த்தான்! நிலவிலே செல்வியின் ஒளி பொருந்திய முகம்! அவன் சிந்தனை சட்டென்று நின்றது! கடியாரம், இரவு ஒருமணி என்பதைக் காட்ட, "டாண்'' என்று ஒன்று அடித்தது. அதே நேரத்தில் செல்வி, கடியாரம் ஒன்று அடித்ததைக் கேட்டாள்! இரவு ஒருமணி! என்று இரு உள்ளங்கள் சொல்லிற்று!

---

**எத்தனை கோவில்களில் எப்படிப்பட்ட பஞ்சமருக்குப் பிரவேசம் கிடைத்தாலும், பிராமண (பார்ப்பன) அர்ச்சகன் தான் சாமியைப் பூசை செய்யலாம் என்பது உள்ளவரை தீண்டாமை இருந்து தானே தீரும்.**

---

## வேதமென்பது வேதியர் சூதுரை.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் ஒய்யாரமாக வாழ்ந்து வருவதைப் பார்த்துக்கொண்டு, கூழுக்குக் கதியின்றி, நீ குமுறிக் கொண்டு குக்கலைவிடக் கேவலமாகக் காட்சி தருகிறாயே! ஏன் என்று சிந்தித்ததுண்டா நீ? உன் உரிமையை, உன் உளப்பண்பை உதறித்தள்ளி விட்டு இருகொடியேந்தியாய் ஆரிய அடிவருடியாய் வாழும் இனமே! கேள்! கவனத்துடன் கேள்!

மனிதனுக்கு மனிதன் அடிமையாயிருக்கும்படி சட்டமேது முண்டா? பிறவியிலே பேதமா? இனத்திற்கு இனம் இழிவா? யோசனை செய்! இத் திராவிடநாடு உன்னுடையது. உழைத்தவன்நீ ஊராண்டோன்நீ. மனிதத் தன்மையை மக்களுக்கு உணர்த்தியவன்நீ. "நீ ஒரு திராவிடன்'' ஒதுங்கி நில்லாம்த! ஊக்கங்குன்றாதே! வலிமையிழக்காதே! உறுதிதளராதே! உன்உரிமையை நீ பெறுவதற்கு முற்படும்போது உலகிலுள்ள எந்த சக்தியும் உன்னை அணுவளவும் அசைக்க முடியாது. வெற்றியுண்டு, அச்சமில்லை என்ற பேரிகையோடு புறப்படு உரிமைப் போர்க்களம் நோக்கி. ஆண்டை என்று ஒருவன் அவனுக்கு அடிமையாக ஆயிரம்பேர்! என்ற நியதி ஏன் ஏற்படவேண்டும் என்பதை எண்ணிப்பார்! அரசாங்கத்திலே பெரும் பெரும் உத்தியோகங்கள் இராமசாமி அய்யர்களிடத்திலும், டவாலிபோட்ட டபேதார் வேலை முனிசாமிகளிடத்திலும் தேங்கிக் கிடக்கின்றதே! ஏனென்று என்றைக்காவது யோசித்து ஆவன செய்ததுண்டாநீ! உன் இன்றைய நிலையை முன்னிறுத்தி, ஏன்? ஏன்? என்ற கேள்வியம்புகளைச் சரமாரியாகத் தொடுத்த வண்ணமிரு! கிடைக்கும் பதிலை கேடயமாகக் கொண்டு, அடக்கியாளும் ஆணவச் செயலை அழித்தொழிக்க, உன்நிலைமை சீர் பெற்று சிறப்புடன் விளங்க அஞ்சாது அலறாதுவா!

இந்ததிராவிடத்தின்காவலனாய், அரசியல் தந்தையாய், ஈரோட்டுப் பெரியாராய் விளங்கும் பழுத்த உருவம்—எஃதுக்கு ஈடானதென்பர் அவரைப்பலர்; உணர்ச்சியாலும் உள்ளக் கிளர்ச்சியாலும் உண்டாக்கப்பட்ட, மேல்நாட்டுப் புரட்சி வீரர்கள் லெனின், காரல் மார்க்ஸ், இங்கர்சால், சன்யாட்சன், மாஜினி முதலிய அனைவரும் ஒன்றுபட்டு உண்டாக்கிய உருவம் என்பேன் யான். திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்பட்டு தனியாட்சி பெற்றால் சிலர் முதலாளிகளாகவும், சுகவாழ்வில் சிலர் சுகித்திருக்கவும் முடியாது. ஏழை என்றும் அடிமை என்றும் யாருமிருக்க முடியாது. ஒருசாரார் நம்மை ஏய்த்துச்சுரண்டிப் பிழைக்கவும் முடியாது. சுரண்டவும் விடமாட்டேன்'' என்று அடிக்கடி அவர் கூறுவதை நெஞ்சிலிருத்தி நடைமுறையிலே காரியமாற்ற வா வேண்டும்! வெற்றிகாண வேண்டும் என வேண்டிக் கொண்டு விடைபெறுகிறேன்.

இனத்தின் அறைகூவலை ஆண்மையுடன் ஏற்றுச் செயலாற்றப் புறப்படுவோர் எத்தனை பேர்? நெஞ்சிலே கைவைத்துப் பதில் கூறுங்கள்!

[3ம் பக்கத் தொடர்ச்சி]

எங்கே ஒழிப்பார்கள்? உயர்ந்ததற்குப் பின் தாழ்ந்ததும் ஒட்டித்தானே வரும் அதற்கென்ன பதில்? மகாத்மா போயிருந்த லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் அம்பேத்கார் கேட்ட கேள்விக்கு நம் மேதாவிகள் மௌனம் சாதித்தார்கள். நமது இந்து மத தரும கலாச்சாரத்தைக் கேவலமாக நினைத்து அதைத் தாங்கி நிற்கும் மேதாவிகளின் அக்கிரமத்தை நினைத்து அந்தச் சபையிலிருந்த ஆங்கிலேயர்கள் சிரித்தார்கள்.

இங்கிலாந்து போன வட்டமேசைக்காரர்கள் பம்பாய் வந்திறங்கினார்கள். வரவேற்பு நடந்தது அந்தக் கூட்டத்தில் மகாத்மாகாந்தி பேசினார்கள். அவருடைய முதல் வார்த்தை மானமற்ற தன்மை போனால் மரியாதை வரும். மரியாதை வேண்டுமானால் மானமற்ற தன்மையை விடவேண்டுமென்பதே. இங்கிலாந்தில் மானம்போன உணர்ச்சியை மகாத்மாதான் உணர்ந்தார். (அம்பேத்கார் கேட்ட கேள்வியாவது) நானும் உங்களைப் போலவே யிருக்கிறேன் ஊண், உடை, போக போக்கிய முதலியவைகளிலும் ஒரே மாதிரிதான். உங்களைப் போலவே படித்திருக்கிறேன், பாஸ் பண்ணியிருக்கிறேன், இந்துவேதமும் படித்திருக்கிறேன், எல்லா வற்றிலும் உங்களைப்போலவே நானிருந்தும் தீண்டாமையை என்னை விட்டு ஏன் போகவில்லை என்பதாம். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது சாத்தியமில்லை வேதத்திலிருக்கிறது, கடவுள் சொன்னது, இந்து தருமம், பண்டைய மதசம்பிரதாயம், சனாதனதருமம் என்கிற பதிலைச் சொல்லமுடியாது. அது மனிதர்கள் இருக்கும் சபை தீண்டாமைபோக வேண்டுமென்பதில் மகாத்மாவிற்குக் கவலை அதிகம். தீண்டாமை போகாவிட்டால் இந்துமதமே அழிந்துபோகுமென்பதை உணர்ந்து கொண்டார். தீண்டாமை போகப்பாடுபட்டார். தீண்டாமை போகாவிட்டால் மதமும் சாதி வித்தியாசத்தை விடாவிட்டால் இந்து சாதியும் அழிந்து போகுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். மகாத்மாவைப் பெரியவரென்றும் அவர் வார்த்தை உண்மை என்றும் அதைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லுகிற நீங்கள் தீண்டாமை போகவும் ஜாதிகள் ஒன்றாகவும் இதுவரையிலும் என்ன செய்தீர்கள்? இனிமேல் என்ன செய்யப்போகிறீர்கள்?

மண்டபம், கோவில், ஸ்தூபி, படத்திறப்பு, பாட்டு, பஜனை, இராமாயணம் பிரசங்கம், லெட்சதீபம், லெட்சார்ச்சனை, காந்தி பெயர் வைப்பது எல்லாம் செய்யுங்கள் இதனால் எல்லாம் தீண்டாமை போய்விடுமா? கார்திகையைப் பின்பற்றின காந்தி பக்தர்களாகி விடுவோமா? இங்கிலீஷ் ஓட்டலில் சாப்பிட்டு ரயில்வேஸ்டேஷன் ஸ்பென்சர் ஓட்டலில் காபி குடித்து மீசையைத்தடவி ஒரு கனைப்புக் கனைத்து, குட்டையில் முகத்தைத் துடைத்து விட்டால் தீண்டாமை போய் விடுமா? கதர், காங்கிரஸ், பிரச்சாரம், அந்தஸ்து, அதிகாரம், உத்தியோகம் இவைகளால், மற்ற ஜாதிக்காரர்கள் வீட்டில் சாப்பிட்டு பார்ப்பார்கள் வீட்டுப் படியில் சனாதனத்தை நிறுத்திவைத்தால் ஜாதிவித்தியாசம் போய்விடுமா? ஆசாடபூதித் தனத்தையும் அந்தரங்கப்புரட்டையும்நாம்விட்டு விடவேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து எழுதின கடிதம் இனியும் புஸ்தகத்திலிருக்கிறது. உருட்டும், புரட்டும் சிரட்டையில் என்கிற பழஞ் சொல்லும் நமது நாட்டிலிருக்கிறது அரசு, வியாபாரம், தொழில், சாஸ்திரம், சுகம் இவைகளெல்லாம் ஆங்கிலேயர்களிடமிருந்தது போலவே நாமும் நடத்த வேண்டியிருக்கிறது. இவைகளுக்குள் இந்து கலாச்சாரமும், இந்து தருமமும் பூந்து கொள்ள வேண்டுமென்கிறார்கள் அதைப் புகுத்து வதிலேயே பார்ப்பார்கள் கருத்தாயிருக்கிறார்கள். அரசு, வியாபாரம், சாஸ்திரம் முதலியவைகளில் பார்ப்பார்களாகிய நாம் கைப்பற்றி இருந்து கொள்ளுவோம் மற்றவர்கள் அங்கே நெருங்காமலிருக்க இந்து தருமகலாச்சார மென்றும், கண்ணன் காட்டிய வழி யென்றும், இராமாயண பாரதங்களுக்கு தேசீயப்பத்திரிகைகள் அர்த்தமெழுதி நமக்குப் போதிப்பதும் இராஜகோபாலாச்சாரியார் காந்தி அனுமார்; அதனாலேயே அரச மண்டபத்தில் குடி வைத்ததும் பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு விரோதம் பேசுவது குற்றம் என்கிற விதியும், எதற்

ரோஜா முத்தையா

காக சூத்திரன் சூத்திரனாகவே இருக்கவேண்டுமென்பதே யல்லாமல் வேறு என்ன? எத்தனை நாளைக்கு சூத்திர சாதியும், உணர்ச்சியற்ற தன்மையுமிருக்குமென்பதை நான் அறியேன்.

இப்பொழுது ராஜாங்கத்தாரோ, பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்களெழுதி பள்ளியில் பாடமாக வைக்கப் போகிறார்களாம். லண்டன் மேஜை மகாநாட்டில் அம்பேத்கார் கேட்ட கேள்வியும் அந்தக் கேள்விக்கு நமது மேதாவிகேள் பதில் சொல்ல முடியாமல் முழித்த முழியையும், மகாத்மாவிற்கு தீண்டாமையிலுண்டான உணர்ச்சியும், அவர் பம்பாயில் வந்திறங்கின உடன் மானங்கெட்ட தன்மை போனால்தான் மனிதத் தன்மை வருமென்று சொன்னதையும், தீண்டாமை யிருந்தால் இந்து சமயம் அழிந்து போகும் சாதியிருந்தால் இந்து சாதியே அழிந்து போகும் என்பதையும், சேர்த்து ஒரு பாட புத்தகம் எழுதி பள்ளியில் பாடமாக வைத்தால் தீண்டாமை போவதற்கு அனுகூலப்படாதா? பிள்ளைகள் படித்தால் அவர்கள் பெரியவர்களான பின்னாவது உபயோகப்படுமே. இதைப் பார்ப்பனர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பார்ப்பனர்களுக்கு வேதம் பெரியது. வேதத்திற்குப் பார்ப்பனர்கள் எஜமான. வேதப் பிரகாரம் பார்ப்பனர்கள் நடக்கிறார்களா? இல்லையா? என்பது அவர்களைப் பொருத்தது. அதைக் கேட்க யாருக்கும் பாத்தியதை இல்லை. வேதம் விதித்தப்படி மற்றவர்களெல்லாம் நடக்க வேண்டும். அதுதான் பாத்தியதை. அதுதான் இந்து தருமம். அதைத்தான் காப்பாற்றவேண்டுமென்கிறார்கள். தீண்டாமை போக வேண்டுமானால், பார்ப்பனர்கள் உண்மையில் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள். பார்ப்பனர்களே! நீங்கள் நம்நாட்டில் விஷத்தை பரப்பிவிட்டீர்கள். பாம்பு கடித்த விஷத்தை அந்த பாம்பேவந்து இறக்குமாம். அந்தக் கதை போல் நீங்கள் பரப்பின விஷத்தை நீங்களே இறக்கிவிடுங்களென்று சுவாமி விவேகானந்தர் பார்ப்பார்களுக்குச் சொன்னார்.

ஒருபெரும் சமூகத்தை எதிலும் சேர்க்காமல் விரட்டி யாரும் தண்ணியும் ஆகாரமும் கொடுக்கக் கூடாதென்று கட்டளை போட்டால் அந்த சனக் கூட்டம் எங்கே போகும்? எப்படி வாழும் என்கிற இரக்கம்கூட இல்லாத இந்துமதத்தைப் பள்ளியில் பாடமாக வைக்காவிட்டால் மாணாக்கர்களுக்கு ஒழுக்கமும், நன்னடத்தையும் வராதென்று சொல்லுகிறவர்கள் அந்தக் கொடுமைகளில் சம்பந்தப்படாத ஏடுகள் " என்ன இருக்கிறது? எந்த ஏட்டைப் பாடமாக வைப்பது? என்பதே என்கேள்வி. மலையாளத்தில் ஆணோ, பெண்ணோ சமுதாயத்தில் குற்றம் செய்துவிட்டால் வீட்டைவிட்டுத் தள்ளிவிடுவார்கள். தள்ளப்பட்டவர்களை எந்த தாழ்ந்த சாதி இந்துவும் சேர்த்துக் கொள்ளக் கூடாது. சேர்த்துக் கொண்டால் தண்டனை. முகமதியர்கள் சேர்த்துக் கொள்ளுவார்கள். நம்பூதிரி வீட்டுப் பெண்களுக்கு பலநாள் விவாகமாவதில்லை. தப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் சந்தேகப்பட்டால் தள்ளிவிடுவார்கள். முகமதியர்தான் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

வாலிபர்களே! படித்தவர்களே! ஏகநாதரின் திருவருளை முன்னிட்டு மலையாளத்தில் தீண்டப்படாதவர்களுக்கு ஒருசிறு நன்மை நடந்து வருகிறது. அதை நீங்கள் தெரிவது போலவே திராவிடக் கழகத்தாரால் இந்து சமயமும் இந்து தெய்வமும் ஓடியோ அழிந்தோ போகுமென்று சொல்லும் இந்து ஆத்திகனும் பக்தனும் இந்து தரும கலாச்சாரப் பண்டிதனும் சாஸ்திரியும் தெரியவேண்டியதாகும். மலையாளத்தில் எல்லாத் தொழிலாளிகளும் தீண்டப்படாத சாதிதான். தொழிலின் அவசியத்திற்கு ஏற்றபடி தீண்டாமை போகும், வரும். செரமன், நாயாடி என்கிற இரண்டு சாதி பெரிய தீண்டாத சாதி. செரமன் வயலில் வேலை செய்வான். ஊருக்குள் வரமாட்டான். நாயாடிக்கு வயலிலும் வேலை கிடையாது. பொது இடம் எல்லாருக்கும் பாத்தியதை என்பதாலும் வேலைக்கு ஆள் கிடைக்காததாலும் அதில் சிறிது மாற்றமுண்டு. கொடுமையான வைதீக மதம் இனியும் சட்டத்திற்கு இடம் கொடுப்பதில்லை. சட்டம் போடுவது ராஜாங்கம். சட்டத்திற்கு வழிவிட வேண்டியது அங்குள்ள நம்பூதரியும் நாயரும். வழிவிடாதவர்களைக் கேட்பது அதிகாரிகள். அவர்களும் அவர்கள் தானே.

மலையாளத்தில் சில இடங்களில் வீட்டு முன்கட்டு பின்கட்டுகளில் தீண்டப்படாதவர்களைக் கூலியாக வேலைக்கு வைப்பார்கள். அந்த ஊர் கடைகளில் கிறிஸ்தவ சிலுவைகள் கயறு கோர்த்து விலைக்கும் வாடகைக்கும் கிடைக்கும். அதை வாங்கித் தீண்டப்படாத கூலிகளின் கழுத்தில் போட்டு விடுவார்கள். சாயந்திரம் வேலை தீர்ந்து போகையில் கழட்டிக் கொடுத்து விட்டுப் போய் விடுவார்கள். சிலுவை கழுத்திலிருக்கும் வரையிலும் தீண்டாமை இல்லை; போய்விடுகிறதென்பது அவர்கள் நிச்சயம். சிலுவையை எடுத்து விட்டவுடன் தீண்டாமை வந்து விடும். இந்து மதாபிமான கருணாநிதிகளே! இந்து கலாச்சார இந்து தருமத்தைப் பார்த்தீர்களா? சிலுவையின் பெருமையை உணர்ந்தீர்களா? நமக்கு நாலு வேதம், பல ஸ்மிருதிகள், பதினாலு சித்தாந்த ஆகம சாஸ்திரம். இவைகளைப்பற்றின பல சாஸ்திரங்கள், மும்மூர்த்திகள், அவர்கள் பெண்சாதி பிள்ளைகள், தேவர்கள், ரிஷிகள், இதிகாச புராணங்கள், லிங்கம், ருத்திராட்சம், துளசி, மாலை, விபூதி, நாமம், பஞ்சாட்சரம், சிதம்பர சக்கரம், அனுமார், கெருடாழ்வார், கம்பராமாயண காட்சி அளிக்கும் பண்டிதர், ஆராய்ச்சிப் பண்டிதர் எழுதினால் இந்த வியாசத்தில் அடங்காத எத்தனையோ வைபவங்களை உடையவர்கள் நாம். அத்தனையும் ஒரு சிலுவைக்கு இணையாகவில்லையே. பிரயோஜன மற்றதைச் சொல்லிப் பாமரர்களை ஏமாற்றுவதை விட்டு மகாத்மா காந்தி அவர்களைப் பின்பற்றுவதாகச் சொல்லுகிறவர் கவனிக்கட்டும்.

சிறிது நாளைக்குமுன் பெஜவ்டாவில் பார்ப்பார சாஸ்திரிகள் சேர்ந்து ஒரு சபை கூட்டினார்கள். அதில் ஒரு சாஸ்திரி சூத்திர ஆணுக்கும், பார்ப்பாரப் பெண்ணுக்கும் பிறந்தவர்களே சண்டாளச்சாதி என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதென்றார். பார்ப்பாரப் பெண்ணிடம சூத்திர ஆண் கூடினால் உடனே அந்த சூத்திரனின் ஆண் குறியை அறுத்துவிட வேண்டுமென்கிற ஸ்மிருதியின் விதி இத்தனைப் பெரிய சண்டாள சாதி உண்டாவதற்கு எத்தனை சூத்திர ஆணும் பார்ப்பாரப் பெண்ணும் கூடவேண்டுமென்று அப்பொழுதே "குடி அரசு"ப் பத்திரிகை எழுதியிருந்தது. திராவிட வாலிபர்களே! பெரியார் சொல்லுகிறபடி பொறுமையும் அடக்கத்தையும் கைவிடாதீர்கள்.

குடி அரசுப் பதிப்பக
வெளியீடுகள் பல
அழகிய முறையில்
அச்சாகி வருகின்றன

தூத்துக்குடி மாநாட்டில்
நமது புக் ஸ்டாலில் கிடைக்கும்.
நாதன் கம்பெனி, ஈரோடு.

ரோஜா முத்தையா

[2ம் பக்கத் தொடர்ச்சி]

நாரதர்:- அது யார் சுவாமி, உமக்குப் பாதம் தாங்கிப் படிக்கற்கள்?

லக்ஷிமி:- என்ன நாரதரே! சுவாரஸ்மார்போன விஷயத்தைப் பேசிக் கெடுக்கிறீரே?.........

விஷ்ணு:- சொல்லுகிறேன் கேளுங்கள். நம் ஆதிசேஷன் (விஷப்பாம்பு) ராஜாஜி நம்மைப் புகழ்ந்து பிரச்சாரம் செய்ய நம் பாதநீர் குடிக்கும் அடிமைகளாக-விபீஷணர்களாகத் தமிழ் நாட்டில் காமாஜர், ஓமந்தூர் ரெட்டியார் முத்தாங்க முதலியார், சுப்பராயன் சிதம்பரநாத முதலியார் முதலியவர்கள் நமக்குக் கிடைத்தார்கள். நம் ராஜாஜிக்கு ஓர் கார்க்கோடகன் ஒரு கல்கியும் கிடைக்க நம் செல்வாக்கு தமிழ் நாட்டில் பரவிற்று. இடையே சென்னை மவுண்ரோட்டில் ஒருஹிந்து என்ற பத்திரிக்கையும் தொடங்கி நம்மைப் புகழ ஒரு பூதேவனும் நம் முன் வந்து நான் வளர்க்கும் வர்ணாஸ்ரமத்துக்கு தண்ணீர் வார்த்தான் ஒரு சீனிவாசன் எனும் பார்ப்பான். பெரியார் இராமசாமி சொல்வதுபோல நானும் பூதேவர்களை பார்ப்பனன் என்றே குறிப்பிடுகிறேன். எந்தப் பார்ப்பனர்களுக்காக, இல்லாத ஒன்றை இருக்கிறதாகச் சொல்லி அதற்கு ஹிந்து மதம் என்ற பெயரும் கொடுத்து நான் பல எதிர்ப்புகளையும் எதிர்த்துப் போராடினேனோ, அந்தப் பார்ப்பனர்கள் கூட்டம், என்னைத் தங்கள் எதிரி யென்றும், தங்கள் கூட்டத்தற்கு ஊறுதேடுகிறவன் என்றும், தங்களுக்காக சில சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு சதி செய்து கோட்ஸே என்பவனைக் கொண்டு என்னைக் கொலை செய்து விட்டார்கள். நன்றிகெட்ட கூட்டத்தார்கள்! தன்னைக் காப்பாற்றி வளர்த்த அண்ணலைக் காட்டிக் கொடுத்த நன்றி கெட்ட விபீஷணனைப்போல நன்றி கொன்ற காலிகள் என்னைக் கொலை செய்து விட்டார்கள். ஆமாம் எட்டி மரத்திற்கு தேன் ஊற்றி வளர்த்தாலும் எட்டிப் பழம் கசப்பாகத்தான் இருக்கும். இந்தப் பார்ப்பனர்கள், பாதகர்கள்! சுயநலக்காரர்கள்! உழைப்பை உறிஞ்சும் உலுத்தர்கள்! என்று பொது உரிமைக்காரப் பெரியார் கூறுகிறார் என்றால் அது குற்றமில்லை. முழு உண்மையே. என் சங்கநாதம் (சர்தார் பட்டேல்) என்னை நன்கு விளம்பரம் செய்வார். என் சக்ராயுதம் (ஜவஹர்) சர்வாதிகாரம் செய்வார். ஆதிசேஷன் (ராஜாஜி) விஷமப் பிரச்சாரம் செய்து என்புகழ் நாட்டுவார். பார்ப்பனர்கள் என் நோக்கத்தை அறியாது என்னை எதிரியாக எண்ணி ஏமாற்றத்தில் கொன்றாலும், நாட்டு மக்களை கொன்ற எனக்கு கோவில் கட்டி என்பெயரால் சுரண்டி வாழ நல்ல வாய்ப்பு அமைத்துக் கொண்டார்கள் கயவர்கள்-பாதகர்கள். பழம் கிழிந்த பஞ்சாங்கங்கள். (பெருமூச்சு விட்டுப் பேச்சை நிறுத்துகிறார்)

நாரதர்:- பாபுஜீ! தங்கள் தரிசனம் கொடுத்தால் தேவலை. நான் கைலாசம் வேறே செல்லணும்.

விஷ்ணு:- லக்ஷிமி.......இல்லை கஸ்தூரிபாய்!.........என்ன பூர்வ ஞாபகம் வந்ததோ இல்லையோ? இப்படி வந்துநில் கஸ்தூரிபாயாக .........நாரதரே! இப்பொழுது எப்படி காந்தி, கஸ்தூரிபா சொரூபம் திருப்திதானே.........!

நாரதர்:- ஹே! அஹிம்ஸா மூர்த்தி! ஆர்யரட்சகா! கஸ்தூரிபா ரமணனே! காந்திஜியே! நமக!...... ஸ்ரீ காந்திஜியே நம: விஷ்ணுஹரே!

(காட்சி முடிகிறது)

**திரை விழுகிறது.**

# வெகுதூரமோ?

★

"பெ. முருகேசன்"

நாடெங்கும் உள்ள திராவிடர் கழகம் எல்லாம் சோதனையிடப்பட்டுக் கருப்புச் சட்டைகளையும், இயக்கப் பத்திரிகைகளையும் எடுத்துச் சென்றனர் என்ற செய்திகளைப் பத்திரிகைகளில் படித்த பின்பு, நமது ஊருக்கு மட்டும் என் ஒருவரும் வரவில்லை? இது ஒரு அவமானமாக இருக்கிறதே! என்று எண்ணமிட்டு வருந்தியவாறு தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். நான் எதிர்பார்த்தபடி இரவு மணி பதினொன்று இருக்கலாம். சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் இரண்டு போலீஸ்காரர்கள் ஆகிய நால்வரும் என்னிடம் வந்து சேர்ந்தனர். வந்ததும் என் வீட்டைச் சோதனை போடவேண்டும் என்றார்கள். நான் எதிர்பார்த்தது தான், நடத்துங்கள்! என்றேன். சோதனை நடந்தது. கருப்புச் சட்டைகள், துண்டுகள் முதலியன கைப்பற்றப்பட்டன. இவைகளை எடுத்துக் கொண்ட போலீசார், நான் என் திராவிடர் கழகத்தில் சேர்ந்தேன்? அதன் கொள்கையும் திட்டமும் என்ன? அபாயகரமான ஆயுதம் ஏதாவது வைத்திருக்கிறாயா? என்றெல்லாம் கேள்விகள் கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றும் பதில்சொல்லாமல் அவர்களின் சோதனைக்குத் தப்பியிருந்த என் ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்று, உங்கள் கேள்விகளுக்கு விடை, இதைப் பார்வையிட்டால் விளங்கும் என்றேன். முதன் முதல் அவர்கள் கையில் திராவிடநாடு பேப்பர் கிடைத்தது. இதை எடுத்துக் கொண்ட இன்ஸ்பெக்டர் என்முகத்தைப் பார்த்தார். நான் இதை ஸ்தாபிப்பதுதான் என்கொள்கை என்றேன். அடுத்தபடியாகக் கிடைத்த குடி அரசுப் பேப்பரைக் கையில் எடுத்தவுடன், எங்கள் திராவிட நாட்டில் இதை உண்டாக்குவதுதான் எங்கள் திட்டம் என்றேன். இதற்கு எனக்கு என்ன உரிமை என்ற கேள்வியை அவர் கேட்காவிட்டாலும், அவர் கையில் கிடைத்த திராவிடன் பதில் கூறிற்று. அடுத்தபடியாக?

அந்தோ! நான் மறைத்துவைத்திருந்த ரகசியப் பயங்கர ஆயுதம் போர்வாள், டார்பிடோ முதலியவைகள் அவர்கள் கையில் கிடைத்து விட்டன.

இதை எடுத்துக்கொண்ட போலீசார் தாங்கள் தேடிவந்தது கிடைத்து விட்டது என்ற வெற்றிப்பார்வையோடு என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டு, உன்னைக் கைது செய்கிறேன் என்றார்கள். நானும், மகிழ்ச்சி. செய்யுங்கள்! என்றேன். என்னைக் கைதியாக்கி வெளியில் நின்றுகொண்டிருந்த லாரியில் ஏற்றுவதற்காகக் கொண்டுபோனார்கள். பின்னால் வந்த போலீஸ்காரர் ஒருவர், இதோ இன்னும் ஒன்று, இதையும் பாருங்கள் என்று இன்ஸ்பெக்டரிடம் ஏதோ ஒன்றைக் கொடுத்தார். கையில் வாங்கிய அவர் புது வாழ்வு என்றார். நான் உங்கள் முயற்சி எங்களுக்குக் கட்டாயம் அதை அளிக்கத்தான் போகிறது என்று சொல்லிக் கொண்டே லாரியில் ஏறினேன். ஏறிய பிறகு தான் ஏற்கனவே என் நண்பர்கள் பலர் அங்கிருக்கக்கண்டேன். அவர்களைக் கண்டவுடன் உணர்ச்சி மிகுதியால் எல்லோரும் சேர்ந்து "பெரியார் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே! அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை! என்று கோஷமிட்டோம். பக்கத்தில் இருந்த என் நண்பன் என்ன இப்படி இரைகிறாய் என்று தட்டி எழுப்பினான். அப்பொழுது தான் இதெல்லாம் தூக்கத்தில் நான் கண்ட கனவு என்பது தெரிந்தது, இக்கனவு நனவாகும் நாள் வெகுதூரமோ?

சிந்தனைக்கோர் சிறந்த விருந்து! புத்தக உலகில் ஓர் புரட்சி!!

தன்மானத்தந்தை

**பெரியார், ஈ. வெ. ரா. அவர்களின்**

★ "தமிழ்" (மொழி ஆராய்ச்சிப் பேச்சு புத்தக வடிவில்)

★ கப்பலோட்டிய திராவிடன் "வ. உ. சிதம்பரனார்"

திராவிடர் தளபதி

அறிஞர், அண்ணாதுரை, M. A. அவர்களின்

(ஆலயப்பிரவேசம், சமத்துவம், சுய ஆட்சி இந்தியாவில் வாலிபர் தேவை, உன்னாலும் ஆகும் மேடைப் பேச்சு, உலகப்பெரியார் காந்தி ஆகிய ரேடியோ பேச்சுகளின் தொகுப்பு)

★ "அறிஞர் அண்ணா பேசுகிறார்"

ஆகிய நூல்கள் பல வர்ண அட்டைப்படத்துடன் சிறந்த முறையில் விரைவில் வெளியிடுகிறோம். விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு தரப்படும்.

விவரங்கட்கு:— பெரியார் பதிப்பகம்,
புரட்சிப் பாசறை, திருப்பத்தூர் (வ. ஆ.)

# எமது தீர்ப்பு

## சமதர்மம்.

ஆக்கியோர் அறிஞர் சி. என். ஏ.
விலை அணா 0—4—0.
திராவிடன் பதிப்பகம்; வேலூர்.

சமதர்மம் வேண்டுமா? சாதி பேதம் உள்ளவரை அது எப்படியப்பா தலை நீட்டும்? சமவுரிமையை நிலை நாட்டு! சமதர்மம் அங்கு பிறக்கும்! இதை அண்ணா அவர்கள் அண்ணாவுக்கே உரிய தனி நடையில் அழகுபட விளக்கியிருக்கின்றார்கள். காடி விடுகிற கம்யூனிஸ்ட்களும் இதை ஒரு முறை படித்தால் அவர்கள் அறிவு தெளிவடையும் என்பது நம எண்ணம். நீங்கள் படியுங்கள் என்று சொல்லவா வேண்டும்?

## புதிய பாதை.

எழுதியவர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. விலை அணா 0—12—0
ஞாயிறு நூற்பதிப்பகம்.
28. அம்பலத்தாடு அய்யர்மடத்துவீதி, புதுச்சேரி.

தமிழ், இலக்கியம் போன்ற எழுபொருள்களில் தோழர் நெடுஞ்செழியனால் புதிய பாதை விளக்கப்பட்டிருக்கிறது. இப்பாதையில் நடந்து செல்ல விரும்புவோர்; களைப்படையாமல் உல்லாசத்துடன் உள்ளக் கிளர்ச்சியுடன் நடந்து செல்லலாம்; அதற்கேற்ற வகையில் அவர் தம் தனித் திறமை விளங்க வழி துலக்கப்பட்டிருக்கிறது.

தனக்கெனத் தனி நடை அமைத்துக் கொள்ளும் திறனையும், அவர் தமிழறிவின் ஆழத்தையும் சிறப்பாக இப்புதிய பாதை விளக்குகிறதெனலாம்.

கடைசியாக—புதிய பாதையில் போவது ஆபத்தானதோ, யாதோ என்று அய்யுறுகிறீர்களா? படித்துப் பார்த்தல்லவா முடிவுகட்ட வேண்டும். படித்துப் பாருங்கள்.

## தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

ஆசிரியர்: குழந்தை.
விலை அணா 0—4—0.
வள்ளுவர் பதிப்பகம், பவானி வழி, ஈரோடு.

ஆசிரியர் குழந்தையவர்கள் இராவண காவியமியற்றித் தமிழினத்தின் இழிவைத் துடைத்தவர் என்பதும், தமிழ் மக்களிடத்தும் மொழியிடத்தும் தணியாத காதலுடையவர் என்பதும் தமிழ் மக்கள் அறிந்த ஒன்று. தமிழன்பு மிக்க இவர் இப்பொழுது தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் பெருக்கத்தையும், அதனால் அறிவு வளர்ச்சிக்குப் பெருஞ்சாதனமான அச்சுத் தொழிலும், கையச்சுப் பொறியும் வளர்ச்சியடையாமல் தடையாயிப்பதையுமுணர்ந்து அதைப் போக்க இந்நூலை ஆக்கித் தமிழறிஞர்களின் பார்வைக்கு அனுப்பியிருக்கின்றார்.

இவர் காட்டியிருக்கும் முறையில் இன்றையத் தமிழ் ஒலிகளையெல்லாம் 30 வடிவங்களுக்குள் அடக்கிவிடலாம், ஆனால் அந்த உருவங்களைப் பார்க்கும்போது அந்த முறை மக்களால் எளிதில் வரவேற்க முடியாதென்றே நம்புகின்றோம். ஆயினும் தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் செய்ய படித்துப் பார்த்தல் பெரும் பயனைத் தரும்.

## திருவிடம்.

(மாதமிருமுறை)
ஆசிரியர்: சி. பி. தண்டாயுதபாணி.
(பிரதி 0-1-6. ஆண்டுக்கு 2-0-0.
20. பி. மதனீஸ்வரன் கோயில் தெரு, காஞ்சிவரம்.

"இனி நின் நிலை சமநோக்கம் பெறட்டும் திருவிடமே!" என்றுகூறி அந் நோக்கம் முதிர இன்ப வாழ்வைப் பெற்று எல்லோரும் சமவுரிமையுடன் வாழப் பாடுபடுவதை நோக்கமும் பணியுமாகக் கொண்ட இதழ். மாஜிப்போர் வீரர்களின் குறைகளைக் களையப் படவேண்டும் என்ற ஆசிரியரின் நோக்கம் இவ்விதழில் சில கட்டுரைகளால் விளக்கப்படுகிறது. இதுவரவேற்கப்படவேண்டியதாகும். இது நிலைத்து நின்று நீண்டகாலம் மக்களுக்குப் பாடுபடுமென்று நம்புகின்றோம்.

## வணிகர் மன்றம்.

திங்கள் இதழ்.
ஆசிரியர்: இரா. வெங்கடேசன்.
விலை அணா 0—2—0.
18. நடு கல்லுக்காரத் தெரு, திருச்சினாப்பள்ளி.

தமிழ் நாட்டின் கண் மதத்துணையற்ற மக்களாட்சி, பொருளாதார சமத்துவம், அந்நிய ஆதிக்கமில்லா வாணிகம் ஆகிய இம் மூன்றின் அடிப்படையில் அரசியல், கலை, மொழி, பண்பு முதலிய பல வழிகளிலும் பாடுபடுவதை நோக்கமாகக் கொண்டதென்கிறார். ஆசிரியர். தமிழ் அறிஞர் பலரின் அறிவுரைகள் இந்த முதலிதழை அழகு செய்கின்றன. தமிழ் மக்கள் இதை விரும்பிக் கொள்ளவேண்டும்!

## டைலர்.

(மாத வெளியீடு)
ஆசிரியர்: என். ராமராவ்.
தனி இதழ் 0—4—0.
98, மேட்டுத் தெரு, கும்பகோணம்.

## அமுத சுரபி.

(தமிழ் இலக்கிய மாதப்பத்திரிகை)
ஆசிரியர்: டி. கே. சுவாமி.
தனிப்பிரதி 0—8—0
வருட சந்தா ரூ. 6—0—0.
7. சுங்குராம செட்டித் தெரு, சென்னை 1.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை